Registered as a Newspaper

விலை - ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-36

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-11 | 26-11-2005 | சனிக்கிழமை | ஓசை 280

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx
Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

## தேசியக் கொடி ஏற்றலுடன்

# தமிழர் தாயகத்தில் மாவீரர் எழுச்சிநாள் உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பம்!

## நிகழ்வுகளில் மக்கள், போராளிகள் பெருமளவில் கூடினர்

(நமது செய்தியாளர்)

**தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது. காலை எட்டு மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டதோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வுகளில் பெருமளவில் மக்களும் போராளிகளும் ஒன்று கூடினர்.**

கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறை நடுவப் பணியகத்தில் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பொதுச் சுடரேற்றினார். தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் ஏற்றினார்.

மாவீரர் பொதுப்படத்திற்கு...

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நிலைமைகள் தொடர்பாக புலிகள்–போ.நி.க.குழு பேச்சு

யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஜோனிற்கும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும் இடையில் பளையில் உள்ள அரசியல்துறைச் செயலகத்தில் நேற்றுக் காலை பத்து மணிக்கு சந்திப்பு இடம்பெற்றது. இச் சந்திப்பின் போது சி.இளம்பரிதி, மக்களது இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் குழப்பம் ஏற்படுத்த திட்டமிடப்பட்ட வகையில் சில நாசகாரச் சக்திகள் (2ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் கேணல் தீபன் (படம்: சோதி)

### மகிந்தவின் கொள்கை விளக்க உரை

## தமிழ்தேசிய கூட்டமைப்பு விவாதத்திற்குக் கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பாக விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் எனத் தமிழ்தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தேவையானால், இது தொடர்பான வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முடியும் எனவும் தமிழ்தேசிய (2ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை புதிய சனாதிபதியால் நிராகரிப்பு!

### ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வாம்

(கொழும்பு)

தமிழர் தாயகம், சுயநிர்ணயம் என்பவற்றை நிராகரித்த புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷ சிறிலங்காவைத் தாயகமாக ஏற்றுக் கொண்டு ஒற்றையாட்சியின் கீழ் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிட்டு, புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்படும் என்றும் சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷ நேற்று அறிவித்துள்ளார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் மகிந்தராஜபக்ஷ தனது கொள்கை (2ஆம் பக்கம் பார்க்க)




## மாவீரர் நாள் நவம்பர் – 27

"தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது: அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்: அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்."

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## தூயன விளங்கும் சோதி சுடருக பல்லாண்டு.



விண்தொட நிமிரும் வியத்தகு வீரம்
விழிகளில் அன்பெனும் ஈரம்.
விலைகொடுத் தெவரும் வாங்கிட முடியா
விடுதலை நெருப்பெனும் பாரம்.
மண்தொட இறங்கிப் பரவிடும் பாதம்
மழையினைச்சொரிந்திடும் மாதம்.
மானமே தலையில் மகுடமென்றான
மானுட விடுதலைக்கீதம்.
கண்படும் வண்ணம் கலக்கிடும் காற்று
கார்த்திகைப் பூக்களின் நாற்று.
காவிய மொன்றுக் கானதோர் கவிதை
கைவிளக் கானதை ஏற்று.
பண்தொடும் தமிழில் பாடுக வாழ்த்து
பாட்டுடைத் தலைவனைப்போற்று.
பாரெலாம் இன்று வாழ்த்திடும் நாளில்
பரவுது விடுதலைக்காற்று.

தூயன விளங்கும்செம்மைச்
சோதியே; புலரிக் கான
நாயனக் குழலில் ஏறும்
நாதமே; திசைகள் யாவின்
வாய்களும் வாழ்த்திப் பாட
வந்தவா; வாகைச் செல்வா!
தேய்வன அறியா எங்கள்
தேசியத்தலைவா! வாழி.

-புதுவை இரத்தினதுரை-

# கிளிநொச்சி மாவட்ட மாவீரர் குடும்பங்கள் துயிலுமில்லம் செல்ல போக்குவரத்து ஒழுங்கு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்கள் செல்ல வேண்டிய துயிலும் இல்லமும் பேருந்து வழித்தடமும் நேர ஒழுங்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளி. மாவட்டத்தில் வாழ்கின்ற வெளி மாவட்டத்திற்குரிய (யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்) மாவீரர் பெற்றோர்கள் நவம்பர் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் துயிலுமில்லத்திற்குச் செல்லக் கூடிய வசதியுடன் ஒன்று கூடுமாறு கிளி.மாவட்ட அரசியல் துறையினரால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

அவ்வப் பிரதேசப் பொறுப்பாளர்களினால் வெளி மாவட்டங்களிற்கு செல்லவிருக்கும் மாவீரர் பெற்றோர்களை கீழ் குறிப்பிடப்படும் விபரத்தின் ஒழுங்கிற்கு அமைவாக காலை 9.00 மணிக்கு புறப்படத்தக்க வகையில் ஒன்று கூடி ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றனர்.

வட்டக்கச்சி- கல்மடு அ.த.க பாடசாலை, இராமநாதபுரம் கிழக்கு பாடசாலை, வட்டக்கச்சி மாவீரர் மண்டபம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம்,

**அக்கராயன்-** ஐயனார்புரம் பாடசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம், கோணாவில் அ.த.க பாடசாலை,

**பரந்தன்-** முரசுமோட்டை பாடசாலை, குமரபுரம் இந்து மகா வித்தியாலயம்,

**பூநகரி-** வாடியடி பலநோக்கு கூட்டுறவுச சங்கம், ஞானிமடம் பாடசாலை, கௌதாரி முனை அ.த.க பாடசாலை, பரமன் கிராய் பொது மண்டபம், பள்ளிக் குடா சமாச மண்டபம், நாலாம் கட்டை பி.டி..ஆர்.ஓ நிறுவனம், சாமிப்புலம் பாடசாலை, நல்லூர் முருகன் கோவிலடி, ஆலங்கேணி முன்பள்ளி, செல்விபுரம் பொது மண்டபம்,

**கிளிநொச்சி-** கூழாவடிச்சந்தி, முறிகண்டிப் பாடசாலை, சாந்தபுரம் பாடசாலை, கனகாம்பிகைக் குளம் அம்மன் கோவிலடி, திருவையாறு அ.த.க பாடசாலை, பன்னங்கண்டி பாடசாலை, பாரதிபுரம் பாடசாலை, கிளி. கலாச்சார மண்டபம்,

**விசுவமடு-** மாவீரர் மண்டபம், கண்டாவளை மகாவித்தியாலயம், புளியம்பொக்கணை மகாவித்தியாலயம், தருமபுரம் மகாவித்தியாலயம்,

முழங்காவில்- மகாவித்தியாலயம்,

குறிப்பு:- யாழ். மாவட்டம் செல்லும் மாவீரர்களின் பெற்றோர்கள் ஒன்று கூடவும்.

பளை- பளை மத்திய கல்லூரி,

குறிப்பு:- யாழ். மாவட்டம் செல்ல வேண்டிய மாவீரர் பெற்றோர் ஒன்று கூடவும்,வவுனியா, மன்னார், துயிலுமில்லங்கள் செல்வோர் கிளி. கலாச்சார மண்டபத்திற்கு 10.00 மணிக்குச் சமுகம் தரவும்

முழங்காவில்- மகாவித்தியாலயத்தில் யாழ்மாவட்டம் செல்லும் மாவீரர் பெற்றோர் ஒன்று கூடவும்,

கிளி மாவட்டத்தில் வாழ்கின்ற கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள துயிலுமில்லங்களிற்கு (கிளிநொச்சி, ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், முழங்காவில், விசுவமடு, முள்ளியவளை அளம்பில்) செல்லவுள்ள மாவீரர்களின் பெற்றோர்களின் கவனத்திற்கு:-

அவ்வப் பிரதேசப் பொறுப்பாளர்களினால் வெளி மாவட்டங்களிற்குச் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களிலே 27 ஆம் திகதி அன்று மதியம் 12.00 மணிக்கு ஒன்று கூடி நிற்குமாறு அரசியல் துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# மாவீரர் நினைவு வளைவமைத்த இளைஞர்கள் மீது தாக்குதல்!

*–நீர்வேலியில் இளைஞர் காயம்*

யாழ்.நீர்வேலிப்பகுதியில் மாவீரர்நினைவு வளைவு அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மீது இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த என்.நிருஜன் (வயது-22) என்ற இளைஞனே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உந்துருளியில் வந்த இனந்தெரியாதோரே இத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதேவேளை இராணுவ புலனாய்வுத் துறையினரும், ஈ.பி.டி.பி யினரும் இணைந்தே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று சம்பவ இடத்தில் நின்றிருந்தோர் கூறினர். (33,கீ)

# 26 மாவீரர் குடும்பங்களுக்கு சூரிய மின்கலத்தொகுதி வழங்கல்

கனகராயன் குளம் மாதிரி வீடமைப்புத்திட்டத்தில் வசிக்கும் இருபத்தாறு மாவீரர் குடும்பங்களுக்கு இன்று கதிரொளி மின்னாக்கல் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன.

ஆரோபணம் சிறுவர் நிதியம் **(UK)** அமெரிக்கா ரெக் ஆகியவற்றின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தினால் இன்று காலை ஒன்பது மணிக்கு இந்தக் கதிரொளி மின்னாக்கல் தொகுதிகள் வழங்கப் படவுள்ளன.

# அரங்க நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

ஆனையிறவு மாவீரர் நினைவாலயம் அமைந்துள்ள பகுதியில் மாவீரர் நாளான நாளை அரங்க நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் இருந்தும் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் ஆனையிறவு நினைவாலயத்திற்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் செய்யப் பட்டுள்ளது.

மாவீரர் நிகழ்வுகளின் இறுதி நாளாகிய நாளை காலை ஒன்பது மணி தொடக்கம் 12.00 மணி வரைக்கும், பிற்பகல் இரண்டு மணி தொடக்கம்- பிற்பகல் 4.30 மணி வரையும், பின்னர் ஐந்து மணி தொடக்கம் 11.00 மணி வரையும் அரங்க நிகழ்வுகள், நினை வாலய உள்ளக அரங்கில் இடம் பெறும் இசைக்கச்சேரி, நாடகங்கள், கவிதா நிகழ்வுகள் ,வில்லிசை என கலைவடிவங்களாக அரங்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## தமிழர் தாயகம்....

களை வெளியிட்டு ஆற்றிய உரையில், பயங்கரவாதச் செயல்களைச் சகித்துக்கொள்ளாத வகையிலான சிறாரைப் படையில் சேர்க்க வகை செய்யாத புதிய அமைதி முயற்சிகளை முன்னெடுக்க உள்ளோம். முன்னைய அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகளினால் எதுவித முன்னேற்றமும் இல்லை.

நான் வெளிப்படையான, திறந்த முறையிலான அமைதி முயற்சிகளை மேற்கொள்வேன் சிறாரைப் படையில் சேர்க்காத மனித உரிமைகளை உள்ளடக்கியதாக அது இருக்கும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பயங்கரவாதச்செயல்களை அனுமதிக்காத வகையில் சரத்துக்கள் இணைக்கப்பட்டு திருத்தப்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் வெளிப்படையான பேச்சுக்களை நடத்த நான் தயாராக உள்ளேன். ஆனால் சிறுபான்மைத் தமிழர்களுக்கான தனித்தாயகக் கோட்பாட்டை ஏற்கமுடியாது. சிறிலங்கா தான் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலேயர்கள், பேர்கர்களின் தாயகம்.

பலதசாப்தங்களாக நீடித்துவரும் தமிழ் பிரிவினைவாத பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே தீர்வு காணப்படும் அமைதியான முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இந்த அமைதிப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஆனால் இப் பேச்சுக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையேயானதாக மட்டும் இருக்காது.

எமது செயற்றிட்டம் திறந்ததாக வெளிப்படையானதாக பிரிவினைவாதத்தை நிராகரிக்கின்ற இராணுவச் செயற்பாட்டை கைவிடுகிற இறுதித் தீர்வை நோக்கியதாக அந்தத் தீர்வை நடைமுறைப்படுத்தக் கூடியதான வகையில் இருக்கும் பேச்சுக்கள் எளிதில் நடந்துவிடாது. ஆனால் நாம் தேர்ந்தெடுத்துள்ளபாதைபேச்சுக்கள் தான் என்றார்மகிந்தராஜபக்ஷ. (32)

## தமிழ்..

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பானபாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக கட்சி தலைவர்களின் கூட்டத்தின் போது இது குறித்து இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியு மெனக் கூறினார்.

இந்த நாட்டில் இரண்டு வெவ்வேறு ஆட்சிகள் நடைபெறுவதை சனாதிபதித் தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளதாக தெரிவித்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன், நிபந்தனையின் அடிப்படையில் பேச்சு வார்த்தை எதுவும் நடத்தமுடியாது எனவும் தெரிவித்தார். மூன்றாம் தரப்பு குறித்து சனாதிபதி, தமது உரையில் எதனையும் தெரிவிக்கவில்லை எனவும் சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர், அநுர திசாநாயக்க, சனாதிபதித் தேர்தலின் பொழுது, பாரிய முறையில் எந்தவிதமான சமூக மாற்றமும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த அவர் சாதாரண மாற்றமே ஏற்பட்டதாக தெரிவித்தார்.

எப்படியிருந்த பொழுதிலும், தென்பகுதியிலுள்ள சகல அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டு கொள்கைகளின் அடிப்படையில் சமாதான பேச்சு வார்த்தைகளுக்கான பாதை வகுக்கப்படவேண்டும் எனவும் அவர் தனதுரையில் தெரிவித்துள்ளார்.

## யாழ்...

அசம்பாவிதங்களைத் தோற்றுவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தமிழ் பேசும் மக்களால் முன்னெடுக்கப்படும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இயல்பாக புனிதமான உணர்வெழுச்சியுடன் நடைபெறுவதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜோன் மாவீரர் நாள் நிகழ்வுகள் சுமுகமாகவும், அமைதியாகவும் இடம்பெறுவதற்குத் தமது ஒத்துழைப்புடன் யாழ்.மாவட்ட படைத்தரப்பின் தளபதியும் ஒத்துழைப்புத்தருவதாகத் தமக்கு உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் பிரதான நிகழ்விடங்களிலும் தெருக்களிலும் தமது கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடு படுவதற்கு ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## தமிழர்....

ரினை மூன்று மாவீரர்களின் தாயாரான தவமணி தேவியம்மா ஏற்றி மலர் மாலையினையும் அணிவித்தார். அடுத்து மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு திருமதி நாகரத்தினம் அம்மா சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தியதையடுத்து அரசியல் துறைப் பொறுப்பாளர் முதல் மாவீரர் லெப். சங்கர், முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதி ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி மலர் மாலையும் அணிவித்தார். அடுத்து அரசியல் துறை துணைப் பொறுப்பாளர், தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் படத்திற்கு சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தினர்.

இதேபோன்று 2ஆம் லெப்.மாலதி படையணியினர் மகளிர் அரசியல் துறையினரின் அனுசரணையோடு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட 1989 மாவீரர்களுக்கு மாவீரர்களின் திருவுருவப் படங்களைக் கொண்ட நினைவு மண்டபத்தில் நிகழ்வினை ஆரம்பிக்க, பொதுச் சுடரினை மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை சோதியா படையணி தளபதி கேணல் துர்க்கா ஏற்றினார். மாலதி படையணியின் கொடியை 2ஆம் லெப் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஏற்றியதையடுத்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா பொதுச் சுடரேற்ற, தமிழீழ தேசியக் கொடியினை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றினார். தொடர்ந்து ஈகச் சுடரேற்றப்பட்டு மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தருகில் தமிழீழ மருத்துவப் பிரிவினரால் அமைக்கப்பட்ட விசேட நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை மருத்துவப் பிரிவுப் போராளி சிவா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றியதையடுத்து, மாவீரர் திருவுருவப் படங்களுக்கான சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. கிளிநொச்சி அரச செயலகத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் பொதுச்சுடரேற்ற தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ நிர்வாக சேவைபொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்றினார்.

இதே போன்று கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகில் உள்ள சாள்ஸ் அன்ரனி படையணியின் நினைவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில்,பொதுச்சுடரினை படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனியின் சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் ஏற்றினார்.

தமிழீழகாவல்துறையின் நடுவப் பணியகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ காவல்துறையின் நிர்வாகப் பொறுப்பாளர் போராளி ஈளகன் ஏற்றினார். அடுத்து தேசியக் கொடியினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார். கிளிநொச்சி வைத்தியர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை வைத்தியசாலைப் பணியாளர் கௌரி ஏற்ற தமிழீழத் தேசியக் கொடியினை மருத்துவமனையின் துணை நிர்வாகப் பொறுப்பாளர் றோமியோ ஏற்றினார்.

இதே போன்று முல்லைத்தீவில், முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட நினைவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ கடற்படைத் தளபதிகளில் ஒருவரான கானல்யுகன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றி வைத்தார். அடுத்து முதல் மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப்படத்திற்கு சங்கரின் தந்தையார் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து தமிழீழ கடற்படையின் சிறப்புப் படையணியின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு தேசிய எழுச்சி பேரவையின் செயலாளர் சண்முகநாதன் பொதுச் சுடரேற்றியதோடு ஆரம்பமானது. இங்கு தமிழீழ தேசியக் கொடியினை புதுக்குடியிருப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றினார். அத்தோடு புதுக்குடியிருப்பின் மாவட்ட நீதிமன்று மருத்துவர்பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை போன்ற இடங்களிலும், நிகழ்வுகள் இடம்பெற்றன.

உடையார் கட்டில் அமைந்துள்ள மட்டு அம்பாறை மாவட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் முல்லை. மாவட்ட நீதியாளர் சுமதி பொதுச் சுடரினை ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியை ஜெயந்தன் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் நளன் ஏற்றினார்.

மல்லாவி ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை போராளி சசி ஏற்ற தேசியக் கொடியினை மாலதி படையணிப் போராளி கோமதி ஏற்றினார். மல்லாவி மாவீரர் நினைவு மண்டபத்திலும், நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிளி.மாவட்ட நீதிமன்றில் இடம் பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார். தேசியக்கொடியினை நீதி நிர்வாகத்துறை பொறுப்பாளர் இ.பரா ஏற்றி வைத்தார். அத்துடன் நீதி நிர்வாகத்துறையில் இருந்து வீரச்சாவடைந்த மாவீரர்கள் உட்பட மாவீரர்களுக்கான உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வும் இடம் பெற்றது. இதில் நீதியாளர்கள், சட்டவாளர்கள், காவல்துறையினர் பணியாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் முல்லை மாவட்ட நீதிமன்று, ஜெயபுரம் மாவட்ட நீதிமன்று, மன்னார் மாவட்ட நீதிமன்று, மல்லாவி மாவட்ட நீதிமன்று மற்றும் நீதி நிர்வாகத்துறை நடுவப்பணியகம் ஆகியவற்றிலும் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதே போன்று தமிழீழத்தில் உள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்கள், மாவீரர் நினைவு மண்டபங்கள், நினைவாலயங்கள், பாடசாலைகள், அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியகங்கள் போராளிகளின் பாசறைகள், பொது இடங்கள், அங்காடிகள் ஆகிய அனைத்து இடங்களிலும், மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நேற்று ஆரம்மாகின. நிகழ்வுகள். நினை வுரைகள், கலை நிகழ்வுகள், என்பனவும் இடம் பெற்றன.


இந் நிகழ்வுகளில் அரச அரசசார்பற்ற நிறுவனப் பணிப்பாளர்கள், பணியாளர்கள், போராளிகள், பொது மக்கள், மாணவர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

(ச,சோ,கு,லோ,20.0

# மாவீரர் எழுச்சிநாள் ஆரம்ப நிகழ்வில்....




கிளி. அரசியல்துறை நடுவப் பணியகத்தில்



மாலதி படையணி நினைவு மண்டபத்தில்



[illegible] நடுவப் பணியகத்தில்



மாலதி படையணி [illegible]




[illegible] படையணி நினைவாலயத்தில்






[illegible]யில்...



யாழ். பருத்தித்துறையில்...

## மாவீரர் நினைவுப் பந்தல்கள்




தமிழீழ விளை[illegible]னின் நினைவு மண்டபம்



2ஆம் லெப். மாலதி படையணி நினைவு மண்டபம்

(படம்: [illegible])


51ஆவது பிறந்தநாள் வாழ்த்து
அகவை ஐம்பத்தொன்று காணும்
நீள் வல்வைக்
கடலோரம் உதித்த
மாண்புமிகு தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களை
தன்னிகரில்லா
எங்கள் தலைமகனை
தமிழரெம் தவத்தை
நூற்றாண்டு
வாழ்க
வாழ்கவென
வாழ்த்தும்.
திருமுருகன் கொம்யூனிகேசன்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


ஒரு நாள் நிச்சயம் விடியும் - அது
உன்னால் மட்டுமே முடியும்


குறிதவறாத இலட்சிய தலைவனுக்கு
அகவை 51
கடல் போன்ற மனம் கொண்ட எங்கள் பெருந்தலைவனே
உந்தன் காலத்திலே வாழும் விடுதலை அடைந்த
மக்கள் நாம் .எங்கள் கடல் ,எங்கள் நிலம், எமது வானம்
எம்மை ஆளும் தலைவன் உன் விரல் அசைந்தால்
கடல் போல் உன் பின்னால் வரத்தயாராகும் மக்கள் நாம் .
குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்
குருநகர் சிறகுவலை கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்
குருநகர் சென்ஜேம்ஸ் இழுவை றால் சங்கம்
குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
குருநகர் குத்தகையாளர் சங்கம்
(சி.13300)

# தலைவர் காட்டியதிசையில் வீரத்தை விதைத்து

# வெற்றிக்கு வித்தாகியவர்கள் எங்கள் மாவீரர்கள்

## -நினைவாலய திறப்பு விழா வில்தமிழீழ கடற்படைத் தளபதி சூசை



[அலுவலக செய்தியாளர்]

**தலைவர் காட்டிய திசைகளில் எல்லாம் சென்று வீரத்தை விதைத்து எதிரியை அழித்து தாயகத்தின் வெற்றிக்கு வித்தாகியவர்கள் எங்கள் மாவீரர்கள். இவ்வாறு தமிழீழக் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.**

ஆனையிறவில் நேற்று முன்தினம் நடை பெற்ற மாவீரர்நினை வாலயத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி தொடர்ந்து உரையாற்றுகையில்; தமிழீழ விடுதலைப்போராட்டத்தை உலக அரங்கிற்கு நகர்த்திய பெருமைக்குரியவர்கள் எங்கள் மாவீரர்கள்.விடுதலைப் போராட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தலைவருக்கு உறுதுணையாக நின்று விடுதலையை உரமாக்கிய முதல் வித்து மாவீரன் சங்கர். அன்றுமுதல் இன்றுவரை பதினெட்டாயிரம் போராளிகள் மாவீரராகி மண்ணை உரமாக்கியிருக்கிறார்கள். முப்பது ஆண்டுகால விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரும் வரலாற்று வெற்றிகளைப் படைத்தவர்கள் இவர்கள்.

இந்த மாவீரர்களின் தியாகங்களின் மூலம் பெற்ற வெற்றியை நிச்சயம் நாம் தொடர்ந்து முன்னெடுப்போம் 1991ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளத்தை நாம் வெற்றி கொள்ள முற்பட்ட போது அறுநூறு வரையான படையினர்தான் இங்கு நிலை கொண்டிருந்தனர். அவர்களை அழித்து படைத் தளத்தைக் கைப்பற்றுவதற்கு அம்பாறை முதல் யாழ்ப்பாணம் மன்னார் வரையாக இருந்த எங்கள் போராளிகளை ஒன்றுதிரட்டி பலமான தாக்குதலை மேற்கொண்டோம்.

நாங்கள் ஆனையிறவை சூழத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த அதேவேளை எதிரி தரையிறக்கத்தை மேற்கொண்டான்.இப்படியாக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினர் ஆனையிறவு நோக்கி நகர்ந்தனர் அன்று ஆகாயம், கடல், வெளி ஆகிய மூன்று முனைகளிலும் தாக்குதல் நடத்தினான். அந்தத் தாக்குதலில் நாங்கள் 590 வரையான போராளிகளை இழந்தோம். ஆனாலும் எம்மால் ஆனையிறவை வெற்றி கொள்ள முடியவில்லை.

இந்தத் தோல்வியின் பின்னர்தான் எங்கள் விடுதலைப்போராட்டம் மேலும் வலுச்சேர்க்கப்பட்டது. 590வரையான மாவீரர்களின் அர்ப்பணிப்புடன்.அந்த வெற்றியை எம்மால் பெறமுடியாது போனது. அந்தத் தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்த தலைவர் இரண்டு பிரிவுகளை உருவாக்கினார். விசேடவேவுப்படையணி என்று ஒன்றும் மற்றையது கடற்புறாவாக இருந்த விடுதலைப்புலிகளின் கடலணி கடற்புலியாக மாற்றம் பெற்று மறுசீரமைக்கப்பட்டது.

அன்று வெற்றிகொள்ளப் படாமல்போன ஆனையிறவுத் தளம் அன்று ஒரு அறுநூறு மீற்றர் தொலைவில் இருந்தது அந்தநிலையில் எம்மால்அதை வெற்றிகொள்ள முடியவில்லை. ஆனால் ஒன்பது ஆண்டுகளின் பிறகு எதிரி மிகவும் பலமிக்கதாக இருந்த போது தலைவர் வெற்றிகொண்டிருக்கிறார். ஆனையிறவை நாங்கள் கைப்பற்றியபோது அந்தத்தளம் நாற்பது ஆயிரம் படையினரினதும் பெரும் நிலப்பரப்பினதும் பின்பலத்துடனும் தானிருந்தது. பல உலக நாடுகளின் பின்னணி படைத்தரப்புக்கு இருந்தது இந்த நிலையில்தான் தலைவர் உலகிற்கு ஆனையிறவைக் கைப்பற்றிய வெற்றிச் செய்தியைச் சொன்னார்.

மாவீரர்களின் தியாகங்கள் ஊடாக நாட்டப்பட்ட இந்தக் கட்டுமானம் நிச்சயம் வீச்சாகிக் கொண்டே செல்லும். நாங்கள் ஆனையிறவைக் கைப்பற்றிய பிறகு தலைவர் சமாதானததை அறிவித்தார். அந்த அறிவிப்பை உதாசீனப்படுத்திய எதிரி வெளிநாடுகளில் பலகோடி ரூபாவுக்கு பெற்ற ஆயுதங்களை வைத்து தீச்சுவாலை நடவடிக்கையை மேற்கொண்டான். தீச்சுவாலையை நாம் மூர்க்கமாக எதிர்கொண்டு எதிரியை விரட்டியடித்தோம்.

தலைவர்காட்டிய திசையில் எல்லாம் சென்று வீரத்தை விதைத்து வெற்றி கொண்டு வித்தாகிப் போனவர்கள் எங்கள் மாவீரர்கள். தமிழீழ விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம்தொட்டு இன்று வரை விடுதலைப்போராட்டம் தலைநிமிர்ந்து நிற்க மாவீரர்கள் தான் காரணமாக இருந்தார்கள். இவர்களால்தான் பல படைப்பிரிவுகள் உருவாகியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தை எதிரி கைப்பற்றிய பிறகு வாழ்வா சாவா என்ற நிலையில் இருந்துதான் நாம் முல்லைத் தீவைக் கைப்பற்றினோம். பல்லாயிரம் ஆண்டுகளின் பின்னர் நேர்த்தியான தலைவர் கிடைத்திருக்கிறார். அவரின் காலத்தில் நாம்தமிழீழத்தைப் பெறவேண்டும். அதுவே வீழ்ந்த மாவீரர்களின் கனவாகவும் இருக்கிறது. அதற்காக நாம்அனைவரும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும்.தலைவரின் மாவீரர் நாள் உரையைத்தான் அனைவரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். அவர் என்ன செய்தியைச் சொல்லப் போகிறார் என்பது எமக்கும் தெரியாது. அனைவரைப் போலவே நாமும் தலைவர் சொல்லும் செய்தியை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றார் கேணல்சூசை.

(லோ,கு)

# தேசியத்தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறார்களுக்கு உதவி

(கண்டாவளை)

தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 51ஆவது பிறந்த நாளை முன்னிட்டு விசுவமடு பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளில் கல்விபயிலும் மிக வறுமைக் கோட்டிற்குட்பட்ட முன்பள்ளி சிறார்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து சிறார்களுக்கு விசுவமடு தமிழீழ ஊரக வங்கியில் பணவைப்பு செய்து வைப்புப் புத்தகம் வழங்கப் படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று விசுவமடு பிரதேச அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான நிதியினை கண்டாவளை கோட்ட மகளிர் அரசியல் துறையினரும் விசுவமடு பிரதேச பெண்கள் அமைப்பினரும் இணைந்து சேகரித்துள்ளனர். (14)

# தமிழீழ தேசியத்தலைவரின் பிறந்தநாளில் மன்னார் மாவட்ட நுண்கலைக்கல்லூரி ஆரம்பம்

தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த நாளில் மன்னார் மாவட்டத்தில் தமிழீழ நுண்கலைப்பிரிவினர் நுண்கலைக்கல்லூரி ஒன்றை இன்று ஆரம்பித்து வைக்கின்றனர் "கலை கலைக்காகவன்றி மக்களுக்காக" என்ற தேசியத் தலைவரின் சிந்தனைக்கமைவாக இக்கல்லூரி காலை 11.00மணிக்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் மூத்த கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறவுள்ளது.

# குமுழமுனை வலய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

குமுழமுனை வலய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு குமுழமுனை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. முள்ளியவளை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சரவணன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். தமிழீழ தேசிய கொடியினை தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றினார்.

மாவீரரின் திருவுருவப்படத்திற்கு மூன்று மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகச்சுடரினை ஏற்றினார்கள். தொடர்ந்து சிறப்புக் கருத்துரையினை கேணல் சூசை நிகழ்த்தினார். தொடர்ந்து குமுழமுனை மகாவித்தியாலய மாணவர்களின் சிறப்புக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பிற்பகல் 2.00 மணிக்கு நிகழ்வு நிறைவுபெற்றது. (20)

# அளம்பிலில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் மழைக்கால தொற்று பற்றிய கருத்தூட்டல்

மழைகாலத் தொற்றுநோய் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு அளம்பில் தியாகதீபம் மருத்துவ சேவையினரால் கடந்த திங்கட்கிழமை அளம்பிலில் அமைந்துள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புக்களில் வசிக்கும் மக்களிற்கு நடத்தப்பட்டுள்ளது.

இதில் தியாகதீபம் மருத்துவ மனையின் வைத்தியர்கள் தொண்டர்கள் அனைவரும் இணைந்து சுகாதார விழிப்புணர்வுக்கருத்துரைகளையும் சுகாதார விழிப்புணர்வு சம்பந்தமான துண்டுப்பிரசுரங்களையும் வழங்கினார்கள். அண்மையில் பெய்து வரும் தொடர்மழையினால் பெரும்பாலானோரிற்கு காய்ச்சல், வயிற்றோட்டம், தடிமன் போன்ற நோய்கள் ஏற்பட்டிருப்பதை அவதானித்தே இவ்விசேட விழிப்புணர்வு இடம்பெற்றுள்ளது. (20)

# சிங்கள தேசம் திணிக்கும் போரை எதிர்கொள்ள தமிழீழ தேச முப்படைகளும் தயார்நிலையில்

## -வடபோர்முனைக் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த தளபதி லோறன்ஸ்





(அலுவலக செய்தியாளர்)

சிங்கள தேசம் எம்மீது திணிக்கின்ற போரைத் துணிவுடன் எதிர்கொள்வதற்காக தமிழீழத்தின் முப்படைகளும் எந்நேரமும் உசார் நிலையில் உள்ளன என வடபோர்முனைக் கட்டளைப் பணயகத்தைச் சேர்ந்த தளபதி லோறன்ஸ், நேற்று முன்தினம் பளையில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

கடந்த காலங்களில் எமது மண் மீதும் மக்கள் மீதும் குண்டுகளைப் போட்டு அழித்தவர்கள், பாடசாலைகள் மீது குண்டுகளை வீசி மாணவர்களைச் சின்னாபின்னமாக்கியவர்கள், இலட்சக்கணக்கான மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து அகதிகளாக வெளியேற்றியவர்கள் எமது மண்ணிலிருந்து வெளியேறப்போகும் காலம் நெருங்கிவிட்டது.

ஆகவே எம்மண் சுதந்திரம் பெறும்வரை எமது தேசியக் கொடி ஐக்கியநாடுகள் சபையில் அங்கீகாரம் பெற்று அங்கு பறக்கும் காலம் வரும்வரைஎமது தேசம் விடுதலை அடையும் காலம் வரை நாம் துணிவுடன் எந்தவகையிலும் போராடத் தயாராகவே உள்ளோம் எனவும் லோறன்ஸ் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் உரித்துடையோர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். இதனொரு கட்டமாக நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள 130 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வானது பளை மத்தியகல்லூரி மண்டபத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச மாவீரர் செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் காலை பத்துமணியளவில் பளை கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்தனா தலைமையில் ஆரம்ப மானது. ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பொது மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவாணன், பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் ஆகியோர் அணிவிததனர்.

வரவேற்புரையினை மாவீரர் செயற்பாட்டுக்குழுப் பொறுப்பாளர் நகுலன் நிகழ்த்தினார் நினைவுரையினை வர்த்தக சங்கத்தலைவர் அமீர் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறப்புரைகளை அரசயல துறையைச் சேர்ந்த தமிழ்விழி, லோறன்ஸ், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர்கள். மேற்படி பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வில் பளைமத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(லோ,கு)

நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!



தங்கத்தமிழ்த்தாய் பெற்றெடுத்த
தவப்புதல்வன் எம் தலைவருக்கு
பொங்குதமிழ் உணர்வுடனே
பொழிகின்றோம் வாழ்த்துக்கள்!

ஜீவா (F) பூட்ஸ்ரவ் சப்ளையர்

(சி-13501) இல:43/04,பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



தமிழர் தலைவனுக்கு வாழ்த்துக்கள்!



உரம் மிகுந்த உங்கள் கரங்களோடு
எங்கள் கரங்களும் உயர்கின்றன.
இலட்சியக்கனவு நிறைவேற நெஞ்சம்
நிறைந்து வாழ்த்துகின்றோம்.

மகா சில்க்ஸ் பியூட்டிசில்க்ஸ்

இல:32, 40A, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

இல:69, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

கவுஸ் ஒவ் செலெக்ஷன்

இல:75B, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-13250)



51 ஆவது அகவை காணும் எங்கள் தலைவனுக்கு உளம் நிறைந்த வாழ்த்துக்கள்!

பன்னெடுங் காலம் வாழும்
பாக்கியம் நினக்குண்டாகும்
விண்தொட நிமிரும் வீர
வெற்றிகள் பலவுண்டாகும்
கண்படாதுன்னைச்சுற்றிக்
காப்பவர் துணையுண்டாகும்
மண்ணிடை நெடுநாள் வாழும்
மனிதனாய் இருப்பாய் வாழி!



(சி-13502)

மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி

இல:76/60, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

# தமிழீழ மாவீரர் நாள் -2005

## நினைவொலி எழுப்பலும் சுடரேற்றலும்

27 ஆம் திகதி சுடரேற்றும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மாலை 6.05 மணிக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பும் இந்த நேரத்தைத் தொடர்ந்து எல்லா மக்களும் அகவணக்கம் செலுத்துவார்கள்.


இந்த நினைவொலி எழுப்பப்படும்போது காத்திருந்து ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்துவது அனைத்து மக்களினதும் கடமையாகும். நினைவொலி எழுப்பப்படும்போது வீதியால் பயணம் செய்பவர்கள் நடந்தாயினும், வாகனத்திலாயினும் போனால் உடன் நின்று பின் ஒரு மணித்துளி நேரம் அந்தந்த இடங்களிலேயே அகவணக்கம் செய்தல் வேண்டும்.

துயிலுமில்ல மைதான நிகழ்வில், பீடத்தில் சற்று உயரமான பெரியசுடர் நாட்டப்பட்டிருக்கும் மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தை சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைந்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவார்கள். ஒவ்வொரு இல்லங்களிலும், வாசல்களிலும் மாவீரரின் சுடரொளியை மக்கள் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும், ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும் தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும், மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை எனக்கூறத் தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். நட்சத்திரங்கள் போல தமிழீழமெங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் ஒளிரவேண்டும் சிட்டி விளக்கேற்றக் கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் ஏற்றியும் பொது இடங்களில் பெரிய சுடர்கள் ஏற்றியும் நினைவு கூர வேண்டும்.

இந்தச் சுடரேற்றும் நிகழ்வானது விடுதலைப் பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.




தமிழீழ மாவீரர் பணிமனை.

-தேசியத்தலைவரின் பிறந்தநாளையொட்டி-

## கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர், மாணவர் இரத்த தானம்

(நல்லூர்)

கோப்பாய் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்கள், முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களுமாக அறுபது பேர் தமிழீழதேசியத் தலைவரின் 51 ஆவது பிறந்த நாளையொட்டி இரத்த தானம் செய்துள்ளார்கள்.

நேற்றுமுன்தினம்காலை 8.30 மணிக்கு கோப்பாய் கல்வியற் கல்லூரியில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றது.

கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி முதலில் இரத்தம் வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதனைத்தொடர்ந்து ஏனையவர்கள் வழங்கினார்கள்.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பாளர் வைத்தியகலாநிதி இ.சிவசங்கர் தலைமையிலான குழுவினர் இரத்தசேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

(41)

## நெடுந்தீவில் காணாமற்போன கடற்படைச்சிப்பாய் திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவில் காணாமல் போனதாகக் கூறப்படும் சிறிலங்கா கடற்படைச்சிப்பாய் மீண்டும் திரும்பி வந்துள்ளதாக நெடுந்தீவு பொலிசார் கூறுகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி நெடுந்தீவு கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படைச்சிப்பாய் ஒருவர் காணாமல் போனதாகக் கூறி கடற்படையினர் நெடுந்தீவின் பல பகுதிகளிலும் தேடுதல்களை மேற்கொண்டு பலரைக் கைது செய்த சம்பவம் அறிந்ததே.

இந்நிலையில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட கடற்படைச் சிப்பாய் திரும்பி வந்துள்ளதாக நெடுந்தீவு பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் காணாமல் போன சிப்பாய்க்கு என்ன நடந்தது என்பது பற்றியோ அல்லது அவர் திரும்பியுள்ளார் என்பது பற்றியோ கடற்படையினர் தரப்பிலிருந்து எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. (33)



தமிழீழ தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று தேசியக்கொடி ஏற்றலுடன் தமிழர் தாயகமெங்கும் ஆரம்பமானது. யாழ். கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் சுடரேற்றுவதையும் அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம். (படம்41)



மாவீரர்களை நினைவு கூரும் நினைவுச் சின்னம் நேற்றுமுன்தினம்யாழ் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது. நினைவுச் சின்னத்தை திரை நீக்கம் செய்யும் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சு.மோகனதாஸ். (படம் 41)




ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழ தேசியக்கொடியை மாலதி படையணியின் கட்டுமானப் பொறுப்பாளர் செல்வி.கோமதி ஏற்றி வைக்கிறார்.




(படங்கள்அன்ரனி)

துணுக்காய் பிரதேசத்தில் வீதிகளில் அமைக்கப்பட்ட மாவீரர்களின் தியாகங்களை சித்திரிக்கின்ற அலங்கார வளைவுகளில் ஒன்று.




துணுக்காய் பிரதேச தமிழீழ நிர்வாக சேவை முல்லை கிளை செயலகத்தில்மாவீரர்களின் நினைவாக அமைந்த நினைவுப்பந்தலில்ஈகச்சுடர் ஏற்றி வைக்கும் நிர்வாக உத்தியோகத்தர்.

# விடுதலையின் முரசொலிக்கு அகவை 51

## உலகத்தமிழர் எல்லாம் விடுதலை பெற்ற மக்களாய் வாழ வழி சமைத்த உந்தன் தூய நாமத்தை போற்றுகின்றோம்

தமிழினத்தின் உயிர் மூச்சாய் தரணி ஆளும் எங்கள்
தலைவனே! ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தை உன்
மூச்சால் உயர்த்தினாய். மாசற்ற மறவர்
புலிப்படையை தமிழர் கவசம் ஆக்கினாய்.
நாமே எம்மை ஆள புதிய நாட்டை கண்டாய் தனிஈழ
தனிஅரசு தனிக்கொடி கொண்ட சுதந்திர தமிழீழ
நாட்டில் தலைநிமிர்ந்து நடக்கும் காலத்தை வென்றாய்
வெற்றித்திரு உருவே தலை வணங்குகின்றோம்
தமிழ் மக்கள் நாம்




விண்தொட நிமிரும் வீரன்
இன்னும் பல்லாண்டு வாழ்க!
வல்வை
கரைதனில்
வந்துதித்த எம்
தலைவா!
சூரியதேவனே!
காற்றும், கடலும்
கருவானும்
வல்லமையே உனை
இன்று வாழ்த்துரைக்க
அண்ணனே!
எம் மன்னனே!
நீ ஆயிரம் ஆண்டுகள்
வாழி! வாழி!!
கடற்றொழிலாளர்களின் கூ.ச.ச. அபிவிருத்திப்பகுதி
வடமராட்சி கிழக்கு

# காவியம் படைக்கும் எங்கள் தேசியத் தலைவருக்கு மணி மகுடம் சூட்டுவோம்.



தமிழின் வரலாற்றுப்
புத்தகமாய், நடமாடும்
தேசியத் தலைவருக்கு
உலகின் கோடித்தமிழினமும்
உள்ளம் உவகை பொங்கி
வாழ்த்துகின்றோம்
உந்தன் காலம்
தமிழினம் உலகில் உயர்ந்த
காலம், புதுமை படைத்த காலம்
பொங்கி எழுந்தகாலம்,
போர்ப்பரணி படைத்த காலம்,
இந்தப் பொற்காலம்,
உந்தன் காலத்திலே
தமிழீழம் வெல்லும்.

சுவிஸ் மினரல் வாட்டர் நிறுவனம்,
இல. 231 கோவில் வீதி-யாழ்ப்பாணம்,
தொ. பே. 8122.

(சி.13379)

# தமிழினத்திற்கு தனி அரசு கண்ட விடுதலை முரசொலியின் அகவை 51



இந்நாள் எங்களின்
பொன்னாள்,
ஒளிமயமானநாள்
இருள் கலைத்த பகலவனின்
விடிவின் நாள்
இனவெறி அழித்த நாள்,
இழந்த உரிமை பெற்ற நாள்,
கரத்தின்விலங்குகள்
உடைத்த நாள், தமிழர்களின்
கண்ணீர் துடைத்த நாள்,
தமிழர் ஆள அரசு அமைத்தநாள்
அந்த அற்புதத் தலைவனை
உலகின் தமிழர் எல்லாம்
சிரம்தாழ்த்தி விடியலின்
வையகத்தை வாழ்த்துவோம்.

யாழ்ப்பாணம் அங்காடி
வியாபாரிகள் சங்கம்
முனீஸ்வரன் வீதி–யாழ்ப்பாணம்.


தமிழினத்தின் உயிர் மூச்சுக்கும் பேச்சுக்கும்
அகவை ஐம்பத்தி ஒன்று
வீரத்தின் விளைநிலம்
எங்கள் தேசியத் தலைவரே
விடுதலையின் வாசற்கதவு வரை
தமிழினத்தை அழைத்துவந்து
விட்டீர்கள். கதவைத் திறந்து
தமிழீழம் என்ற
தனி நாட்டுக்குள் எங்களை
அழைத்துச் செல்லுங்கள்.
தமிழர்கள் நாம் உங்கள்
பின்னால் வர
தயாராகிவிட்டோம்.
இது தமிழர் தசாப்தத்தின்
பொற்காலம்.உங்கள்
அகவை கண்டுளங்கள்
உள்ளம் மகிழ்கின்றது.நெருப்புக்குள்
தள்ளப்பட்ட தமிழினத்தை
கருகாமல் பாதுகாத்த நெருப்பில்
பூத்த வைரமே!
கண்ணீரிலும் செந்நீரிலும்
தத்தளித்த தமிழினத்தை
கரைசேர்த்த வழிகாட்டியே
தமிழீழத் தனியரசின் பெருமகனே!
நீங்கள் ஆளும் காலத்தில் தமிழர் நாம்
வாழவேண்டும்.
(சி.13366)
ஸ்ரீ,பாம் பீச் றெஸ்ரோறன்ட், ராஜா வளாகம் முதல் மாடி, இல. 250, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்
தொ. பே. 222, 6634, 0777 222180 077, 3126902, 0777, 283595 உரிமையாளர் எஸ். சிறீரங்கன் (கம்சன்)




ஒளியினில் பரிதி போல
உண்மையில் நிறைவுபோல
வழி தரும் வாழ்வு காட்டும்
வள்ளலே தலைவா வாழி!
பழிதரும் பகைமை போக்கி
பண்பினில் நல்லுறவுகொண்டு
விழியினில் வீரம் பூக்கும்
வெற்றிகொள் தலைவா
நீடூழி வாழ்க! வாழ்க!

**மைதிலி நகைமாடம்**

இல:89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-13240)



## பல்லாண்டு வாழ்க! வாழ்க!

தலைமைக்கு நீங்களே தகுந்தவர்-ஈழ
மண்ணுக்கு நீங்களே உகந்தவர்
தமிழர்க்கு வீரத்தைத்தந்தவர்-என்றும்
தலைகுனியாமலே நின்றவர்.



**லலிதா புடைவை மாளிகை**

இல:05, 06, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-13239)



## 51 ஆவது அகவை காணும்
# சூரியப்புதல்வனுக்கு எம் வாழ்த்துக்கள்!

51



அரசியலில் மதிநுட்பமிக்கவரே - உலக
அரங்கத்தில் எமை உயர்த்தி வைத்தவரே!
தரணி தனில் உன் தலைமை கிடைத்ததாலே
தமிழர் எம் குனிந்த தலை நிமிர்ந்ததைய்யா!

**பிள்ளையார்**
**பல்பொருள் வாணிபம்**
மல்லாவி –கிளிநொச்சி.

**மருதடிப்பிள்ளையார்**
**களஞ்சியம்**
மல்லாவி.

**முத்துப்பிள்ளையார்**
**வண்ணச்சோலை**
மல்லாவி–கிளிநொச்சி.

(சி-13237)




# ஆவது பிறந்த நாளில்...
## எமது வாழ்த்துக்கள்!



உலகம் வியக்கும் தலைவா வாழ்க!
ஈழத்தமிழர் துயர் துடைக்கும்
தங்கத்தலைவா வாழ்க!
தேச விடுதலையின் தலைவா வாழ்க!
வீறு நடை போடும் வீரத்தலைவா வாழ்க!
உம்மைநெஞ்சார வாழ்த்துவதில்
பெருமகிழ்வடைகின்றோம்.

# வெண்புறா நிறுவனம்

வன்னி யாழ்ப்பாணம் திருகோணமலை மட்டக்களப்பு

(சி-13235)

## 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



உலகிற்கு புரியாத
உத்தமப் பரம் பொருளே
நிலைகுலையா வீரத்தின்
நிஜவடிவே எம் தலைவா
நீடு ஆயுள் பெற்று
நிலைத்திருக்க வாழ்த்துகின்றோம்.

*விடத்தல் பளை,*
*கிராமமுன்னேற்றச் சங்கம்.*

(சி.13289)

## 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

வீரத்தின் சிகரமே
விடுதலையின் ஒளிவிளக்கே
ஈரத்தில் இனியவனே
ஈழத்தின் மன்னவனே
அகவைகாண் இந் நாளில் – உனை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.



**சுட்டிபுரம் அம்மாள்ஆலயம் வரணி,**
**பரிபாலன சபை.**

(சி.132 88)

## 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



தாழ்ந்து நின்ற தமிழினத்தை
தலை நிமிரவைத்த தலைவா
வாழ்ந்திருப்பாய் நெடுங்காலம்
வாழ்த்துகின்றோம் இந் நாளில்

*கொடிகாமம் பிரதேச,*
*உழவுஇயந்திரசங்கம்.*

(சி.13287)

## 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



தமிழினத்தின் தானைத்தலைவா
தலை குனியா வீரத்தலைவா
மலைபோல் உறுதி கொண்ட
மன்னவனே உந்தனது
அகவைத் திருநாளில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

மந்துவில்மேற்கு,
சூரியகுமார் சனசமூகநிலையம்.

(சி.13290)

அடிமை விலங்கொடித்த விடுதலைத் தீப்பொறியின்
அகவை ஐம்பத்தி ஒன்று.உந்தன் புனிதநாமத்தை
சிரம் தாழ்த்திவணங்குகின்றோம்



மண்ணின் வாழ்வுரிமை மறுக்கப்பட்ட தமிழினமே ஈழமண்ணில்
ஒடுக்கப்பட்ட பொழுது வல்வை மண்ணில் வந்து உதித்த
எங்கள் துயர் நீக்கிய தீர்க்கதரிசியே, மனிதர்களை விறகாய்
சிங்கள இனவாதிகள் எரித்தபொழுது, புகை கக்கிய விழிகளுடன்
போராடக் குதித்தாய். தமிழர் விடுதலையின் இலக்கில்
அன்றுமுதல் இன்றுவரை தளராது போராடி மீண்டாய்.
துன்பம்,கண்ணீர், துயரம் தமிழரைச் சூழ்ந்த பொழுதும்
மீண்டு எழ வழிகாட்டினாய்.
வரலாற்றில் வீழ்ந்து கிடந்த எங்கள்
பரம்பரைக் கொடியாம் புலிக்கொடியை மீண்டும் உன்
வீரத்தால் உயர வைத்தாய். உன்னால் தமிழினம் உயர்ந்தது
தமிழால் நீ உயர்ந்தாய். தமிழீழம் என்ற தனியரசின்
பெருமகன் நீயே.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO) UMITED)
THE REFUGEES REHABILITATION ORGANIZATION
இல. 106. 4th chass street Jaffna (T.P-021,222,2416

# தேசத்தலைவனுக்கு அ





ஆண்ட எம் தமிழை மாண்ட எம் மண்ணை
மீண்டும் மீட்பாருக்காய் பார் காத்திருந்தவே
கார்த்திகையில் வந்த வல்வையின் வல்லவ
வேலுப்பிள்ளையின் மைந்தனே! வேங்கைக
உரிமை மறுக்கப்பட்ட எம்மினத்தின் உதிரமே
உலகத்தமிழரின் ஒன்றுபட்ட சின்னமே
வேகமாய் எம் மண் மீண்டு—நம் தமிழ் ஆண்
விழா நூற்றாண்டு கண்டு பல்லாண்டு பல்லா
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## அகவை 51 இல் எமது

- தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் (கைதடி)
- தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (கொடிகாமம்)
- சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
- வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (மருதங்கேணி)
- பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்
- புலோலி ப.நோ.கூ.சங்கம்
- கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
- உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்
- வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்
- வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்
- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்
- யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்
- சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்
- சங்கானை ப.நோ.கூ.சங்கம்

## தமிழ் இனத்தின் உயிர் மூச்சே எங்கள் இதய நாளச் சுரப்பியே
## உந்தன் அகவை 51. ஈழவிடுதலையின் உயிர் மூச்சு



உந்தன் காலத்திலே வாழும் தமிழர் நாம்
எங்கள் எதிர்காலச் சந்ததிக்கும் உந்தன்
காலத்திலேயே எதிர்காலம் ஒன்றை
உருவாக்குவாய் என நம்புகின்றோம்
உன் அகவை ஐம்பத்தி ஒன்றில் உன்னை வாழ்த்துகின்றோம்.

பெஷன் கவுஷ்,
இல. 65, KKS வீத யாழ்ப்பாணம்,
தொ.பே–222–2197, 222–3034

(சி.13353)



## தமிழினத்தின்
## மாசற்ற தலைவனுக்கு,
## மகுடம் சூட்டும், அகவை, 51

உந்தன் காலத்திலே
தமிழர் உரிமை வெல்லும்
நீரும், வானும், கடலும்,
நிலமும் கொண்ட
வழமான மண்ணாய்
தமிழீழம் ஆளும்
விரைவில், விரைவில்
அது நடந்தே தீரும்.
வாழ்க நீர் உம்
காலத்தில்
ஆளும் தமிழர் நாம்,



றோயல் குழுக்கோஸ்
ஏகவிநியோகஸ்தர்கள்
சீவா நறுமணப்பூங்கா
இல–228, ஆஸ்பத்திரி வீதி
யாழ்சாலை.
(சி1339)

தொ. இ. 021 222 2567



தமிழர் வாழ்வை
தலைநிமிரச் செய்த
எங்கள் தமிழீழ தேசத்தின்
தலை மகனுக்கு
அகவை ஐம்பத்தி ஒன்று
ஆவதையிட்டு
தமிழர் நாம் பெருமை
அடைகின்றோம்.
எங்கள் தேசியத் தலைவர்.
மேதகு வேலுப்பிள்ளை
பிரபாரகன் அவர்களுக்கு
எமது இதயம் கனிந்த
பிறந்தநாள் வாழ்த்துக்கள்.



Mother and Baby Care
இல.108 பலாலி வீதி
தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,
தொ.பே.0777 631352







கண்ணீரிலும் செந்நீரிலும் நின்று இனவாத
அதர்மத்தை அடக்கி தமிழர் உரிமை வாழ்வை
கரை சேர்த்த வழிகாட்டியே, உந்தன் காலத்திலே
நாம் வாழ்வதையிட்டு பெருமையடைவதுடன்
உன் அகவை ஐம்பத்தி ஒன்று, தமிழர் மறுமலர்ச்சியின்
சகாப்தம், நீடுழி வாழியவே என வாழ்த்தும்

V.SP லஞ்ஒயில் விற்பனையாளர்கள்,
பரிமளா ஸ்டோர்,
இல–26A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.222-2785

(சி1337)

# வேங்கைத் தலைவனை கவிபாடி வாழ்த்துவோம்!

## வீரம் விளைவித்த பெரும் தலைவா வாழ்க

முன்னோரும் பின்னோரும் கண்டிலா
பூத்திட்ட இக் காலமதை
இந்நாளில் எமக்களித்த
இவ்வுலகத் தமிழ் வேந்தே! வாழ்க.

பகையுலவுங் கோட்டை பலவுடைத்து
பாரே விழி பிதுங்கவுயர்த்தும்
இணையிலா சேனையுடை தமிழனாய்
எழ வைத்த நாயகா! வாழ்க

திக் கெட்டும் எம்நாடு! வீரத்திற்கு
தாயயென்று செய்யு மா றரசு செய்தோனே
எக் காலமும் எம் இதயமதில்
உலவும் ஓர் புதுமைச் சூரியனே! வாழ்க

ஆழ் கடல் போலும்
அந்த ஆகாயம் போலும்
வாழ்கின்ற எம் மக்களின்
மலர் விழியிரண்டின் ஒளியே! வாழ்க

ஆண் டொவ்வொன்றும் உனக் காயிரம்
ஆயுளை பரிசளிக்க வேண்டும்.
மீண்டெழுந்த இக் காலம் போல்
மிகுதி காலத்தையும் சிறப்பிக்கும் சஞ்சீவியே! வாழ்க

த. டே. கிஸ்காட்



## தென்றல் வீசிட வாழ்கவே

ஐம்பதில் உள்ள உன்னை
எழுபது வாழ்த்துகிறது
இதற்குக் காரணம் நீயல்லவா
இந்த உயிரும் உனதல்லவா

அன்னியர் கொடுமையில் அகப்பட்டு
அரை உயிரோடு தப்பி வந்தும்
பின்னும் அவர்கள் இடம் சென்று
பேசாப் பதுமைகளாய் வாழ்ந்த
எம்மைத் திருத்தித் துணிவுதந்து
எழுச்சி கொள்ளச் செய்தவனே
உன்னாலன்றோ உயிர் பிழைத்தோம்
இன்றேல் என்றோ அழிந்திருப்போம்

வீரநெஞ்சமும் ஈரநெஞ்சமும்
கொண்ட வேங்கைத் தலைவனே
சேர சோழ பாண்டியர் பண்புகள்
சேர்ந்த எங்கள் தனயனே
சூரசங்காரன் முத்தமிழ்க் கடவுள்
வாழும் ஊரில் வளர்ந்தவனே
தீரனே பல நூறு ஆண்டுகள்
தென்றல் வீசிட வாழ்கவே!

மனோன்மணி நடராசா

## தமிழ் காக்க நீ வாழ்க!

கொக்கரித்துக் குதித்தெ ழுந்துகூறுவோர் வார்த்தைகளை
எக்காலமும் எவரும் கவனத்திற் கொள்வதில்லை
மிக்காரும் ஒப்பாரும் இல்லா எம் தலைவன் வாய்
எப்போது திறக்குமென்று எல்லோரும் காத்திருப்பர்
தமிழர் மட்டுமன்றி அவனி முழுவதுமே
தலைவன் எனமதிக்கும் தங்கத் தமிழ் மகனே
அமைதியா போரா அது உனது தீர்ப்பென்று
ஆணையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அனைவருக்கும்
அக்கரைச் சீமையிலே அங்கலாய்க்கும் உறவுகட்கும்.
தக்கபதில் கூறு தமிழீழம் மலர்ந்துவிடும்
மலரும் தாயகத்தில் மகிழ்வாய் வலம்வந்து
குலத்தை மீட்டெடுத்த கோமானாய் நீ வாழ்க!
இருநூறு ஆண்டுகள் நீ வாழ்வாய் என்று
பெருமனத்தோடு தீர்ப்பளித்தார் அன்றொருவர்
தமிழர் விருப்பின்படி அது உனக்குப் போதாது
தரணி உள்ளவரை தமிழ்காக்க நீ வாழ்க!

லோகநாதன்

## சூரிய தேவனே நீ வாழ்க

அழுகையும் புலம்பலுமான
அழுமை வாழ்வே எமக்கிருந்தது
கண்ணீர்த்துளிகளையே
காலம் எப்போதும் பரிசாகத் தந்தது

எங்கள் பாட்டனும் பூட்டனும்
எதற்கும் வளைந்துதான் போயினர்
எமக்கென்றொரு வானம்
கரங்களை நிமிர்த்த
எமக்கென்றொரு வெளி
குரல்களை ஓங்கி ஒலிக்க
எப்போதுமே வாய்த்ததில்லை

சூரியதேவனே நீ உதித்தாய்
சீறிய புலியெனப் பகை முடித்தாய்
எமக்கெல்லாம் ஒளி படைத்தாய்
புது வாழ்வை நீ கொடுத்தாய்

ஐம்பத்தொரு அகவை காணும்
அண்ணனே நீ வாழ்க!
எண்டிசையும் உன் புகழ் விளங்க
மன்னவனே நீ வாழ்க!

அ. திவாகரன்,

## 51ஆவது அகவை காணும் எம் தலைவன் வாழிய பல்லாண்டு

தாயகம் மீட்டிட
சேனைகள் சேர்த்தவர்
தாவியெம் புலிகள்-எம்
தாயகம் காத்தனர்
வீரத்தின் சிகரமாய்
விடுதலையின் வழிகாட்டியாய்
உலகத்தை வியப்பில-ஆழ்த்திய
உன்னத தலைவராய்
அதிகம் பேசாத
அற்புத புருசராய்
கார்த்திகையில் வந்துதித்த
காவியத் திலகமே
மாரி மழை பெய்து
மண் செழிப்புற்ற- வேளையில்
பூத்துக் குலுங்கும்-மலர்கள்
புன்னகைக்க
தமிழினம் பெற்றெடுத்த
தானைத் தலைவராய்
வாழிய பல்லாண்டு-என
வாழ்த்தி மகிழ்கின்றோம்

தேசிய எழுச்சிப் பேரவை, கோப்பாய்

## அண்ணனிற்கு ஆயுள் நூறு

முத்தொளி வீசும் முறுவல்
முத்தமிழ் பேசும் இதழ்கள்
பத்தரை மாற்றுத் தங்கம்
பட்டுத் துகில் நிற மேனி
சத்தியப் பார்வை எதிலும்
சாதனை படைக்கும் ஓர்மம்
அத்தனை சிறப்பும் கொண்ட
அண்ணனே எங்கள் இதயம்!

முகமிழந்து அலைந்தோற் கெல்லாம்
முகவரி பதித்தான், தமிழன்
அகமகிழ்ந்து இன்பம் கொள்ளும்
அதிசயம்புரிந்தான-போரில்
நிகரிலாத் தலைவன் எனவாய்
நிமிர்ந்தான் நெடுவான் தொடவே!
யுகத்தினில் பிரபா கரன்போல்
வீரனாய் யார்தான் பிறந்தான்?

தலைவனே ஓர்சொல் சொன்னால்
தமிழினம் அவனின் பின்னால்
அழகனின் அன்பின் முன்னால்
ஆடிடும் தமிழன் கைகால்
விழிகளால் நேரில் பார்த்தால்
வீரமே பொங்கும் உணர்வால்
தலைமையைப் பெற்றாய் பேறு
தலைவனிற்கு ஆயுள் நூறு

அத்தனை தமிழற் குள்ளும்
அண்ணனே உள்ளான் இங்கே
எத்தனை படைகள் வரினும்
எவனெடா வெல்வான்? நாங்கள்
ஒத்தொரு கைகள் பார்ப்போம்
ஒன்றென நிற்போம்: தலைவன்
நித்தமும் எம்மைக் காப்பான்
நிழலடி நின்றே வெல்வோம்!

வேலணையூர் சுரேஸ்

## வரலாற்றுத் தலைவனே வாழ்க!

துடுப்பில்லாப் படகாய் துயரில் தவித்திடு தமிழர் தம்மை
எடுப்பார்கைப் பிள்ளை போலும் உதைத்த சிங்களத்தை
தடுத்தாட்கொள்ள வந்த தலைமகன் ஆனாய் ஐயா-
விண்ணதிர்த்த தெம்முந்தையதவத்தின் வீறே
மண்ணிதை மன்பதையில் பேச வைத்த வல்லமையே எங்கள்
மண்ணினை விடுத்து புலம்பெயர்ந்தரற்று தமிழர்
எண்ணத்தைத் தகர்த்தழித்து ஏற்றங்கள் காட்டி
பண்ணிசைத்திடவே எமக்கோர் முகவரிதந்த கோவே
ஆதிக்க முகாம்கள் தம்மால் பிரிந்திடு தமிழர் தேசம்
ஓயாத அலைகளாலதிர்த்த தழிழ்த்தே வென்றனை உலகில்
நீதிக்காய் நிமிரவைத்து நிறைவுகள் தந்த பேறே
கூத்தாடும்- அலைகள் கூடி ஆர்ப்பரித்தும் மை வாழ்த்த
வேற்று நாடெல்லாம் வந்துன் தரிசனம் பெற்ற காட்சி
அகவை ஐம்பதின் முன்னர் தானே அனைத்திலும் வென்றாய் ஐயா
அகவை ஐம்பத்தி ஒன்று இன்று வந்தது மீதி வெல்லும்
பேறெலாம் உமதே ஆகி மீந்ததை வென்று தாரும்.
வல்லமைப்பேறே எங்கள் வரலாற்றின் தலைவன் நீயே
வெல்லத்தமிழ் இங்கு வாழ வெம்சிந்தை நிறைந்த
மாவீரர் சுமந்திடுதேசக்கனவினை வென்று தமிழர்
வல்லமையே வரலாற்றுத் தலைவனே
வாழ்க வாழ்க பல்லாண்டு

வளவை வளவன்

## தலைவா வாழ்க பல்லாண்டு வாழ்க!

தமிழீழக் கடலின் ஓரம்
உதித்ததோர் விடியல் வெள்ளி
தமிழீழம் நெடுநாள் செய்த
தவத்தினால் உதித்த மைந்தா!
தமிழீழத் தாயகம் பெறுவோம் என்றே
புலியாக நிமிர்ந்த வீரா!
தமிழினத் தலைவா
வாழ்க பல்லாண்டு வாழ்க!

உறங்கிய தமிழினத்தை
தட்டி எழுப்பிய தமிழ்த் தலைவா!
பொங்கி எழுக என்றே
இளம் வீரர் மனம் கவர்ந்தாய்
வரிப்புலி வீரர்கள் சாவுக்கு அஞ்சாத
தீரர்கள் என்றுலகம் வியந்திடவே
பொங்கு தமிழ்த் தலைவா
வாழ்க பல்லாண்டு வாழ்க!

பல சமர்கள் கண்ட தமிழீழத் தலைவா!
பகை படைகள் வந்து நீ இருக்கும் போது
எம்மை என்ன செய்யும்?
தம்பி என்றும், அண்ணைஎன்றும், மாமா என்றும்
நாம் அழைக்கும் செல்லத் தலைவா
வாழ்க பல்லாண்டு வாழ்க!

மதியாமடு சிவகுரு

# எழில் பெருகும் நிலாவழகன் கரிகாலன் வாழியவே

செங்கதிரின் உதயத்தில் முகையவிழ்க்கும் பங்கயமாய்
செந்தமிழர் நாம் மகிழ்ந்தோம் நம் தலைவன் பிறந்தநாளில்
அங்கமெலாம் சிலிர்த்துவிடும் அவன் நாமம் நாவிசைத்தால்
அவனியையே வியக்கவைக்கும் அவதார புருடனவன்
சிங்கத்தின் குகைக்குள்ளும் எதிரிகளைச் சந்திப்பான்
சினங்கொண்டு போர்தொடுத்தால் எதிர் கொள்வார் உயிர்மீளார்
எங்கட்கோர் இரட்சகனாய் எம்தேசம் படைப்பவனாய்
எழில் பெருகும் நிலாவழகன் கரிகாலன் வாழியவே

மண்பறித்த சிங்களத்து இனவாதச் சக்தியெலாம்
மண்டலமாய்த் திரண்டெழுந்து வந்தாலும் இறுங்காத
திண்டோளான் பகையெதிர்ப்பின் திடுக்கிடவே சிதறடிப்பான்
திருந்தாத கொடியவரின் தலையுருட்டித் திகைக்க வைப்பான்
தண்டமிழில் இசைபாடிக் களமாடும் கலைஞனவன்
தாழ்வில்லாச் செம்மனத்தான் கண்டனங்கட் கஞ்சாது
பண்ணிசையில் வாழுகின்ற பார்வியக்கும் தளபதியாய்
பக்குவமாய்ப் படைநகர்த்தி தமிழீழம் படைக்கின்றான்.

சாதியத்தின் மமதையினால் தேசியத்தைச் சிதைக்கின்ற
மேதைகளின் செருக்கடக்கில் சமதர்மம் காக்கின்றான்
வேதியனாய் வேதத்தின் விழுமியங்கள் சுமந்துகொண்டு
வேதனையில் துவளுகின்ற உயிரினங்கள் மீட்டெடுக்கும்
சோதியென நாற்றிசையு மொளிவீசும் பகலவனாய்
சோராது துயில்நீத்து விழித்திருக்கும் இறையுருவம்
பாதியிரா வேளையிலும் பகைநாடிச் சாடுகின்ற
பண்பாளன் இசைபாடித் தாள் பணிந்து வாழ்ந்திடுவோம்

தெய்வத்தின் மறுபிறப்பாய் தேசத்தின் விடிவிற்காய்
தாயகத்தின் தேசியத்தைத் தன்னாட்சி யுரிமையொடு
வையத்தில் வாலாட்டும் வல்லரசின் சதிதகர்த்து
வாழ்விழந்த ஏக்கத்தில் தள்ளாடும் தமிழினமும்
தொய்வு நிலைக் கேகாது வெய்யதுயர் சுமக்காது
தொன்மைமிகு ஆதிக்கம் நிலைநாட்டும் பேரரசன்
ஐயமின்றி யனைவர்க்கும் நல்வாழ்வு நல்கிடுவான்
அவன் காலம் பொற்காலம் ஆகுமென வாழ்த்திடுவோம்

வானத்தில் மின்னுகின்ற தாரகைகள் நடுவினிலே
வலம் வந்து தினம் வளர்ந்து வட்டமிடும் பௌர்ணமியின்
தேனமுதத் தண்ணிலவாய்த் தேசொளிர ஜொலிக்கின்ற
திங்கள் முகம் காணுவதற்கு என்னதவம் செய்தனம் யாம் ஞானத்தில்
மேதையென அஞ்ஞான இருளகற்றி
ஞாலத்து மக்களிடை சமதர்மம் காக்கின்ற
கோனென்றால் கொள்ளாதோ கொஞ்சியவன் முகம் பார்த்து
குதூகலித்தோம்! கரங்கூப்பித் தாள் பணிந்து வாழ்கின்றோம்

ஆகமங்களோதுகின்ற நீதிநெறி யகங்காக்க
அவனியையே யாளுகின்ற ஆளுமையில் விஞ்சிநின்று
பூகம்பம் வெடித்தாற்போல் புன்மதியார் களமுடைக்கும்
பூமாதின் பொன்னான புதல்வனவன் நன்னாளில்
தேகத்தில் வலுவேற்றித் தேசத்தை மீட்டெடுக்க
திரண்டொன்றாய்ப் படைபெருக்கி வல்லரசார் சதிதகர்ப்போம்
ஆகட்டும் தமிழீழம் அண்ணலவன் சாதனையால்
ஆனந்தக் கூத்தாடி யவன்நாமம் வாழ்த்திடுவோம்.

மாரீசன்

# ஐம்பத்தொராவது அகவையில் எதிர்வுகூற முடியாத - எங்கள் தலைவன்


எந்த எதிரியாலும் எதிர்வு கூற முடியாத
புரியாத புதிர் எங்கள் தலைவன்
எதிர் பார்த்து நிற்பது எதிரிகள் மட்டுமல்ல
உலகமும் அதனோடு எங்கள் உறவுகளும்
மாவீரர் உரையினை மதிப்பிட முடியாது
மண்டியிட்டுக் காத்திருக்கின்றது காலம்
சண்டையா? சமாதானமா?
சமாதானத் தொடர் கதையா
என்ன முடிவெடுப்பார் எதிர்பார்ப்போடு எல்லோரும்

சண்டை என்றால் எப்படி?
தாக்கும் திறன் தமிழர் படை பல எண்ணிக்கை
எதிர்வு கொள்ளும் உத்திகள்
எங்கிருந்து? எப்படி? எப்போது?
எதிரிகள் மண்ணிலா? எங்கள் நிலத்திலா?
காத்திருக்கும் கரும்புலிகள் கடலிலா? களமுனையிலா?
எதிரியின் காலடி மண்ணிலா?

ஊடறுத்து உட்புகுந்து நிலையெடுத்து
தலையசைக்கக் காத்திருக்கும் கரும்புலிகள் எத்தனை?
வேவு புரியாமல் வினாத்தொடுத்து
வோர்த்திருக்கிறது எதிரி தேசம்
புரிந்து கொள்ள முடியாத எங்கள் தலைவனில்
புரிந்து கொள்ள முடிந்தது
தமிழர் பால் அன்பும் அரவணைப்பும்.

தமிழர் வரலாற்றில் எங்கள் தலைவன் பிரபாகரன்
வீரத்தின் விளை நிலம் விடியலின் வெள்ளி காலத்தால்
மலரும் ஈழத்தின் கருவறை
ஞாலத்தில் இவன் புகழ் பெருகி வாழவென வாழ்த்துகின்றோம்.

க. பூபதி - சுதந்திரபுரம்



# வீழாத் தமிழினத்தின் விடியலின் ஒளிக்கீற்று

வீழாத் தமிழினத்தின்
விடியலின் ஒளிக்கீற்றே
மங்காத தமிழ் வீரத்தின்
மகத்தான தமிழ்த் தலையே
பேசாது செயல் காட்டும்
பெரும் தகையே எம் தலைவா
நீள் ஆயுள் பெற்று
நிலைத்திடவே வாழ்த்துகின்றோம்

வேங்கைப்படை அமைத்து
வியத்தகு வீரம் தந்த
ஓங்கும் புகழ் கொண்ட
உத்தமப் பெரும் தலைவா
உன்அகவை பிறப்பினிலே
உளம்மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

வெந்து நொந்து நின்ற
வீரத் தமிழர்க்கு
கந்தகக் குண்டேந்தி
காட்டினாய் வழி ஒன்று
எந்தன் தமிழ் மண்ணை
ஏற்குது உலகின்று
அந்த நிலை எமக்கு
அணுகிட வைத்து நிற்கும்
எம் தமிழ்த்தலைவா
வாழ்ந்திருப்பாய் என்றென்றும்

முத்தையனூர்:
ப. துஷ்யந்தன்

# இருண்ட எங்களின் வாழ்வுக்கு ஒளியாக வந்தவர்

கார்த்திகை பூமழை பொழியும் காலத்தில்
பிறந்தவர் எங்கள் தலைவர் மாமா
அன்று அநாதைகள் என்றும்
முகமே விடியாத தரித்திரங்கள் என்றும் சொல்லியே
நடுத்தெருவில் தெருநாய்கள்போல் அலைய கை கழுவி
விட்டவர்கள்
எம் உறவே வேண்டாமென்று
நடுத்தெருவிலே எம் கண்முன்னே
எங்களை தலைமுழுகி விட்டவர்களே!
நாம் என்ன பாவம் செய்தோம்
நாம் உமக்கு என்ன தீங்குசெய்தோம்
எங்கள் வாழ்வோடு விளையாடியவர்களே!
உங்களுக்கு இருக்கும் வாழ்வைப்போல்
எங்களுக்கும் ஒரு வாழ்வைப்பெற்றுத்தர ஏன் மறந்து
போனீர்கள்?
அழ வைத்துப்பார்த்தவர்களே!
அழைத்தவன் குரலுக்கு கீதையிலே
வந்த கண்ணனைப் போல
நாங்கள் அழைக்காமலே
எம் அவலக்குரல் கேட்டு ஓடிவந்தீர்கள்
நல்ல வாழ்வு தந்தீர்கள் வாழ்வு தந்த மாமாவே வாழ்க!
எங்கள் வாழ்வுக்கே உப்புப் போட்ட மாமாவே வாழ்க!
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் மறக்கவே முடியாது
நீங்கள் வந்த பிறகு தான்
ஒளிமயமான எதிர்காலம் எங்கள் கண்களில் தெரிந்தது
வராதவர்களும் வரக்கூடாதவர்களும்
சொந்தமெனச் சொல்லி வந்து போனார்கள்
நடுத்தெருவில் அலையவிட்டு
வேடிக்கை பார்த்த பாழ்பட்டுப் போன பாவியர்கள்
இன்றிருந்தால் எப்படியிருந்திருக்கும்
எங்களின் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னாலும் படிக்கல்லாக
இருந்தவர்
தெய்வமே வந்த மாதிரி............
இருளடைந்த எம் வாழ்வுக்கு ஒளியாக வந்தவர்
தேடிந் தொலைத்த வசந்த வாழ்வையும் தேடித்தந்தவர்
நாம் கண்கண்ட தெய்வமே பல்லாண்டு வாழ்க!
போரியலையும் வாழ்வியலையும் கசடறக்கற்ற மாமாவே
சொல்வதைச் செய்பவரும்
செய்வதைச் சொல்பவரும்
இந்த உலகில் நீங்கள் மட்டுந்தான்
இனிவரும் காலம் எங்களுக்கேயானது
நீங்கள் பாடுபட்டதற்கு பலன்கிடைக்கப்போகும் காலமிது
நீங்கள் எடுக்கும் எந்த முடிவுகளுமே சரியானது
காலத்தை வென்றவனே! ஈழத்தை வென்று தா!
என இந்நாளிலே வாழ்த்துகிறோம்.
மாமாவே வாழ்க பல்லாண்டு!

யோ. யூட்நிமலன்
காந்தரூபன் அறிவுச்சோலை

51 ஆவது அகவை காணும்
எங்கள் தலைவனுக்கு இனிய நல்வாழ்த்துக்கள்



தேசம் போற்றும்–தமிழ்
தேசியத் தலைவராய்
என்றென்றும் நிலைத்திட–எம்
இனிய நல்வாழ்த்துக்கள்

வர்த்தகர் சங்கம்
உடையார்கட்டுப் பிரதேசம்

(6433)

ஐம்பத்தோராவது அகவையில் கால் பதிக்கும்
எங்கள் அண்ணன் பிரபாவுக்கு!

தமிழினத்தின் விடிவிற்காய் தமிழீழம்
தந்தெடுக்க தவப்புதல்வனே வாழ்க!
தேசத்தின் விடிவிற்காய் வீறு கொண்டெழுந்த
வரிப்புலியே வாழ்க!
கலங்காத விழி கொண்டு
நகம்பும் புயலான வீரப்புதல்வனே வாழ்க!
கடல் தரை வான் வரை பதில் கூறி
கரிய வேங்கைகளை உருவாக்கிய
வீரத் தலைவா வாழ்க!
தென்றலென நாமும்
வீறு கொண்ட சூரியப் புதல்வனை
வாழ்க வாழ்க வாழ்கவென்று
வாழ்த்துகின்றோம்.




சி.அருட்காந்தன்,
அ.லெசி,
அ.அபிநயா,
அ.அகலநிலா

(சி.13291)

51 ஆவது அகவையில் கால் பதிக்கும்
எங்கள் அண்ணன் பிரபாவுக்கு!

தமிழர் மானம் காக்கவென
தமிழ்த் தாய் பெற்றெடுத்த தவப்புதல்வா–வாழ்க
தமிழனை தலைநிமிரவைத்த தலைவனே–வாழ்க
தமிழ் மானம் காக்க வந்த கார்த்திகை மலரே–வாழ்க
அகவையில் ஐம்பத்தொன்று காணும் எம்
இனத்தின் உயிரே–வாழ்க தலைவனே பல்லாண்டு
காலம் வாழ்க வாழ்த்துகின்றோம்
கூட்டுறவாய்.



(சி.13294) கிளி.மாவட்ட கூட்டுறவுச்சங்கங்கள்.

தன்னிகரற்ற
தங்கத்தலைவா நீடூழி வாழி!




அடிமை விலங்கொடிக்க
அணிசேர்த்துப் புறப்பட்ட
அண்ணலே இன்றுனக்கு
அகவை ஐம்பத்தொன்றாம்
அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
அவனி போற்ற நீ வாழ்வாய்.

அம்பாள் களஞ்சியம்,
அம்பாள் எரிபொருள் வாணிபம், மருதங்கேணிச்சந்தி,
மருதங்கேணி,வடமராட்சி கிழக்கு,
தொ.இல.077-3222901.

(சி.13393)

51 ஆவது அகவையில்
தலைவன் பிரபா

வல்வை மண் ஈன்றெடுத்த தவப்புதல்வனே
தமிழீழத்திற்கென பிறந்த வீர மைந்தனே
மாவீரரின் கனவை நனவாக்கும் வீரத் தலைவனே
தமிழனுக்கு நாடமைத்துத்தரும் வீரத்தலைவனே
நீ பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க
வாழ்கவென வாழ்த்துகின்றோம்



மருதங்கேணிச்சந்தி,
வடமராட்சிகிழக்கு.

மவுண், பெரியதம்பி, வவி, கண்ணன், தவம்,
குட்டி, செந்தீஸ், ரமேஸ், மதி, ரதீஸ்,ராஜீத்,நந்தன்,சுகு

(சி.13392)

# ...ந் அகவை 51 இல் வாழ்த்துக்கள்!







...ம் மண்ணை
...ாத்திருந்தவேளை
...யின் வல்லவனே!
...! வேங்கைகளின் தலைவனே!
...தின் உதிரமே!
...ன்னமே
...ம் தமிழ் ஆண்டு
...லாண்டு பல்லாண்டு
...கின்றோம்

## எமது வாழ்த்துக்கள்!

- மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்
- பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்
  அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்
- தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்
- காரைநகர் ப.நோ.கூ.சங்கம்
- வேலணை ப.நோ.கூ.சங்கம்
- புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்
- ஊர்காவற்துறை ப.நோ.கூ.சங்கம்
- நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்
- தீவுப்பகுதி (அனலைதீவு) ப.நோ.கூ.சங்கம்
- யாழ்மாவட்ட சிக்கன கடனுதவி கூ.ச.சமாசம்
- யாழ்.மாவட்ட கூ. கிராமிய வங்கிகளின் சமாசம்
- யாழ்மாவட்ட அபிவிருத்தி கூ.சங்கம்
- யாழ்மாவட்ட வர்த்தக தொழிலாளர் கூ.சங்கம்
- யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக்கூ.ச. சமாசம்
- யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை

(சி-13234)

## 51 ஆவது அகவை காணும் எந்தலைவா

# வாழ்க வாழ்க நீடூழி வாழ்க

பணிப்பாளர், பணியாளர்கள், மருத்துவர்கள்,
போராளிகள்,
சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம்,
நினைவு மருத்துவமனை,
புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி.

வல்வையில் பிறந்து நல்ல சாதனைகளுடன்
வலம்புரியாய் வளர்ந்து சொல்லவல்ல
எம்துயரை
கொல்லும் வழி செய்த வல்லவா தலைவா
எல்லாம் வெல்லுவோம் என்றும் நீ வாழ்க.

ஆளும் எம்மினம் ஈழம் மலரும்
நாளும் நும்சிந்தனை வாழும் அண்ணா
வீழும் எதிரிபலம் தூளாய் உடையும்
மீளும் புலிக்கொடி வாழ்க உங்கள்பலம்.



(சி.13394)

## 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



தமிழ்த்தாயின் மைந்தன், தமிழீழத்தின் விடிவெள்ளி தமிழின் காவலன்
எங்கள் தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கட்கு!

### எமது உள்ளம் கனிந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

தமிழீழ, தமிழின விடுதலைக்காக
இரவு பகல் பாராது கடினமாக உழைத்து வரும்
உங்கள் தன்னலமற்ற பணிக்கு –தமிழர் நாம்
பக்க பலமாய் நிற்கின்றோம்– தலைவா
நீ பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்தும்.



பணியாளர்கள்,
பொறிகள் சேவைப்பகுதி,
வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்.

(7055)

## 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

தமிழீழத்தின் ஆணிவேரே
தமிழ் மக்களின் தலைவனே
எம் தேசத்தின் விடிவெள்ளியே
உலகம் போற்றும் உன்னதமே
எம் இனத்தின் ஈழத்தலைவனே
ஈழத்தின் இருள் கிழித்த
அந்த அற்புதத் தலைவனை
எம் சிரம் தாழ்த்திவாழ்த்திடுவோம்
வையகத்தை வாழ்த்திடுவோம்.



நாவற்காடு மக்கள்–கொடிகாமம்

(சி.13286)



## 51 ஆவது அகவையைக் காணும் எம் தேசியத் தலைவருக்கு

வல்வையில் வந்துதித்த
உதய சூரியனே
கார்த்திகைத் திருநாளின்
பார் போற்றும் முத்தே
பாரையும் வியக்கவைக்கும்
கார்த்திகைப் பூவே
உலகத்தார் போற்றும்
தானைகளின் தலைவனே
வல்ல தலைவா வாழியவே
51 ஆவது அகவைதனை
சீருடனும்சிறப்புடனும்
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் நாங்கள்.

செஞ்சோலைக்குடும்பத்தினர்.

(சி.13388)

# 51 ஆவது அகவையில்...

தாயகம் காக்க தரணிக்கோர் தலைவன்
போரினை வென்று தமிழீழத்தை மீட்போம்.
பேரினவாத அரசுக்கு பேரிடி உம் நாமம்
சோர்வினை நீக்கி பரணி பாட
சேர்ந்திடுவோம் உமது அணியில்.
கார்த்திகை மாதத்து அகல் விளக்கே
நீடூழி வாழ் நீண்ட காலம்.



வடமாகாண பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவு
நிறுவனங்களின் பேரிணையமும்
அதன் அங்கத்துவ சங்கங்களும்.

(சி.13398)



51 ஆவது

# பிறந்த தின வாழ்த்து

வசந்தகாலத்து நந்தவனமே, எம் வாசல்களை வருடும்
செந்தமிழ்க் காற்றே உந்தன் காலம் தமிழினத்தின் வசந்த காலம்.
வீழ்ந்து கிடந்த எம் பரம்பரைக்கொடியாம் புலிக்கொடியை மீண்டும்
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு பின்னர் தமிழீழம் என்ற
தனியரசில் பறக்கவிட்டாய். உன் மாசு மறுவற்ற தூய்மையான
வீரத்தால் உலகின் திசைகள் தோறும் தமிழன் என்ற முகவரியைத்
தேடித்தந்தாய்.

பார்போற்றும் எங்கள் தமிழீழ தேசத்தின்
தன்னிகரிலாத் தலைமகனுக்கு மகுடம்
சூட்டுவோம். அகவை ஐம்பத்தியொன்றில்
அடிவைக்கும் உன் திருவடிகளை தமிழர்நாம்
பின்பற்றி அகமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.



Hotline :0773068998
Tel : 021-222 9581
Fax :021-222 9581
Web : www.pcparksl.com
email : info pcparksl.com

Pc Park,
#633 k.k.s Road,
Jaffina.

(F.13292)

# 51 வது அகவை காணும் தங்கத்தலைவனே! வாழி! வாழி!




செந்தமிழின் மைந்தனே
நீ வாழ்க!
தேச விடுதலையின்
வேங்கையே நீ வாழ்க!
பொங்குதமிழ் கொண்ட
புலி நீ வாழ்க!
கரிகாலன் என்ற புயல்
நீ வாழ்க!
கருவேங்கையின் தோழனே
நீ வாழ்க!
தமிழ் வீரத்தின் தலைவனே
நீ வாழ்க!
பகைச்சேனையின் மாயனே
நீ வாழ்க!
பார் போற்றிடும் வீரனே
நீ வாழ்க! வாழ்க!!

*பணிப்பாளர்சபை , பணியாளர்கள்,*
*வடபிராந்திய பாரவூர்த்தி உரிமையாளர் கூ.சங்கம்.*
*பரந்தன், கிளிநொச்சி.*

(சி-13236)


# எங்கள் வீரத்தலைவனுக்கு 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



கண்களில் வீரம் பொங்கும்
கனியுளம் காவல் தெய்வம்
எண்களில் ஆண்டு கூடும்
தமிழோ என்றுமே
இளமை பொங்கும்
எங்களின்தலைவா
தமிழ்போல் என்றுமே
நீடூழி வாழ்க! வாழ்க!!!

(சி-15238)

## யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்


இலக்குத் தவறாத தமிழினத்தின்
வழிகாட்டிக்கு அகவை
51
தமிழ் இனத்தின் கவசமாய், காக்கும்
எங்கள் காவலனே
கண்ணீரிலும், சென்னீரிலும்,
கசக்கிப் பிழியப்பட்ட
தமிழ் இனத்தின் கண்ணீரைத்
துடைத்த காவியமே
அல்லலுற்ற தமிழ் இனத்தை
உயிரோடு பாதுகாத்த
எங்களின் உயிர் மூச்சே
நீங்கள் வாழும் காலம்
தமிழர்களின் வசந்தகாலம்,
வரலாற்று வழித்தடத்தில்
தமிழினத்தை வழிநடத்தி செல்லும்
வீரமும் விவேகமும்
மதிநுட்பமும் ஆற்றலும் கொண்ட
தமிழினத்தின்,
தலைவரே உங்களை எம்
இதய மூச்சைத் திறந்து
வாழ்த்துகின்றோம்.
MANOJ AIR TOURS (PVT) LTD
இல, 32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. 021:222 3916
222, 2007.

(சி.13381)


உருக்குலையாத உறுதியின் வைரமாம்
எங்கள் தமிழீழ தேசத்தின் தலைமகனுக்கு
அகவை 51
இது தடைகள் உடைத்த தலைவனின்
காலம்,பகைவன் படையை அடித்து,அவன்
பயணம் முடித்த - புலிப்படை வாழும் காலம்
அடிமை வாழ்வை முடித்து, தமிழர் ஆளும்காலம்
வரலாற்றைத் திருத்திய வழிகாட்டியின் காலம்
தமிழர் வரலாற்றில் புலிக்கொடி மீண்டும் ஆளும்
காலம் உந்தன் காலத்திலே,சுதந்திர நாட்டின்
தனியரசில் தமிழ் மக்கள் நாம்.
தலைமை அலுவலகம்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,
தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

51

# பொறுமையின் உச்சமே எங்கள் போர்முரசின் முற்றமே, அகவை ஐம்பத்தி ஒன்று ஆவதை எண்ணி தலைவணங்கி வாழ்த்துகின்றோம்




இது மாசற்ற மறவர்களின்
குருதிச் சுவடுகளால் எழுப்பப்பட்ட
தேசம், அற்புத தியாகத்தின்
பிரசவத்தில், பிறந்த
தமிழீழ தேசம் இது,
பிரசவவலி எனும் போர் மரபின்
வேதனையையும், பொறுமையையும்,
உலகிற்கு உணர்த்திய
புலிப்படை பாசறையின் தீரம்,
இந்த அற்புதபடையின்
நாடித்துடிப்பும், உயிரின்
இருப்புமாய் இருக்கும்
எங்கள் உயிரினும் மேலான
தேசியத் தலைவருக்கு
எமது இதயம் கனிந்த
வாழ்த்துக்கள்.

Old Park Restaurant (PVT) LTD
இல, 40 கண்டி வீதி, கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி-13374)

## வீழ்ந்து கிடந்த தமிழினத்தை மீட்டெடுத்த தீர்க்கதரிசியின் அகவை ஐம்பத்தொன்று, ஆற்றல் கொண்ட எங்கள் தலைவனை உலகத் தமிழர் எல்லாம் ஒன்றிணைந்து வாழ்த்துவோம்



51

இது எங்கள் தலைவனின் காலம்,
உன் கரங்களின் விசைகளுக்காய்
காத்திருக்கும் தமிழர் நாம்,
நீங்கள் உத்தரவு இட்டால்
பேனாக்களும் துப்பாக்கியாய் மாறும்.
இது எங்கள் சொந்தமண்
எதிரிகள் நிலைத்திருக்க முடியாது.
வீழ்ந்து கிடந்த தமிழர்களுக்கு
வழி காட்டினாய் உரிமையிழந்து
அதிகாரமிழந்து வாழ்ந்த
தமிழனை இன்று அரியணை
ஏறச்செய்தாய்,
தனிக்கொடி கொண்ட புலிக்கொடி
படைத்து தமிழினத்தை
வாழச்செய்கிறாய், உந்தன் காலத்தில்
வாழ்வதால் நாம் பெருமை அடைகின்றோம்.




தென்மராட்சி கல்விவலய ஊழியர் நலன்புரிக் கழகம்

# விடியல் பெறும் தேசத்தின் விடிவெள்ளியாம் எங்கள் தேசியத் தலைவருக்கு அகவை

51

## உலகின் தமிழர் எல்லாம், ஒரு கணம் போற்றி வணங்குவோம் திருநாள் நவம்பர்–26



தமிழன் வாழ ஒரு நாடு கண்டாய்,
இனவெறி பகையை அழித்து,புது ஈழம் கண்டாய்
தமிழர் மரபிற்கோர்,போர் மரபைக் கண்டாய்
உன் போர் மறவர்கள்
முன்னால் வீழ்ந்திடும் வெற்றி கண்டாய்
பாரினில் இது புலிப்படை என்றாய்,நாளையும்
தமிழர் உரிமை வெல்ல பாயும் என்றாய்
உந்தன் வசந்த காலத்தில் வாழும் அடிமை
விலங்குடைத்த விடுதலையின் மக்கள் நாம்.




தென்மராட்சி மக்கள்

(சி.13380)


# சரித்திரம் படைக்கும் எங்கள் தேசியத் தலைவருக்கு அகவை

51



பாரினில் சரித்திரம்
படைத்த எங்கள் தலைவன்
வழியில் எழுந்த மக்கள் நாம்
குன்றாத வீரத்தின்
எங்கள் தலைவன் விளைநிலம்
வற்றா அன்பின் நதி
பெரும் சூறைக்காற்றைத்
தாங்கிய பாறை
புயலுக்கும் ஈடுகொடுக்கும்
முரசொலி சங்கீதம்.
முழங்கும் சங்கு கடல்போல்
தாரான உள்ளம். மலைபோன்ற
மக்களின் ஆண்.
விடுதலை பேசிடும் விண்மீன்
எதிரிகள் எட்டாத வானம்.
காற்று மட்டுமே சந்திக்கும்
அற்புத விடிவெள்ளி.
உன்னைத் தலைவணங்குகின்றோம்
விடுதலை அடைந்த தமிழ் மக்கள் நாம்

CITY MEDICALS,
இல.487 ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம் –தொ. பே 021,222,2198


பல்லாண்டு புகழ் சிறக்க வாழி! வாழி!
தரணியெல்லாம் தமிழினத்தை
தலைநிமிர வைத்தவனே!
பரணியென்ற இன்னுமொரு
பா பாடவைத்தவனே!
மரணித்த மாவீரர் புகழ் காத்தவனே!
அரண் நீ எமக்கு!
வாழ்த்துகின்றோம்! வாழ்கவென்று!!
ச.வி.முருகேசு குணரட்னம்
வடபகுதி ஷெல்காஸ் ஏக விநியோகஸ்தர்
இல-154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-021-2222100, 2055

# தமிழர்களின் குலவிளக்கிற்கு

## அகவை ஐம்பத்தி ஒன்று தமிழர் விடுதலையின் நூற்றாண்டு

தமிழீழ மண்ணில் நாங்கள் மூச்சு விடும் சுதந்திரத்தின்
சுவாசக் காற்றாய் வாழும் எங்கள் தலைவனே
உந்தன் பொற்காலத்தில் பெருமிதம் கொள்ளும்
தமிழர்கள் நாம். நாம் வாழ எமக்கொரு நாடும் எம்சந்ததிகள்
காலம் முழுவதும் சுதந்திர புருசர்களாய் கௌரவமான பிரஜைகளாய்
வாழ்ந்திட வழிசமைத்த பகலவனே உன் திருஉருவை வாழ்த்துகின்றோம்



றொலெக்ஸ் வெதுப்பகம்,
இல: 118 கஸ்தூரியார் வீதி,
(சி.13461) யாழ்ப்பாணம்.



# நூறாண்டு வாழ்க! வாழ்க!



கார்த்திகையில் கண்மலர்ந்த
கரிகாலச் செம்மலே!
பார்வியக்கப் படைநடாத்தும்
ஈழத்தின் இளவலே! - உன்
சாதனைகள் சொல்வதற்கு
காவியங்கள் ஏராளம் - எம்
தாயகனாய்த் தரணியெங்கும்
ஒளி வீசும் தாரகையே! - நின்
புத்தகவையில் உனக்காய்ப்
புதுப்பரணி பாடுகிறோம்!
குனிந்திருந்த தலைகளினை
நிமிர்த்தி நின்ற வேந்தே!
குதறி நின்ற பேய்களிற்கு
கிலி கொடுத்த மறவே! - நின்
பாதையிலே தமிழர் சேனை
ஒரு கொடியில் ஒன்றாகச்
சுட்டு விரல் சுட்டட்டும்
பகையழிக்க என்று
சுதந்திரத்தில் சங்கமமாய்த்
தமிழர் சேனை முழுதும் - அந்
நாள்தனைத் தருவாய்'
நாம் மகிழ என்று - நின்
அகவைதனில் உன்னை
வாழ்த்துகிறோம் - நீ
நூறாண்டு வாழ்க! வாழ்க!

பணிப்பாளர்,
போராளர்,
பணியாளர்,
வருவாய்ப்பகுதி
நிதித்துறை
தமிழீழ விடுதலைப்புலிகள்


(6945)


எங்கள் முற்றத்து நிலவுக்கு அகவை 51
எங்கள் விலைபேறு இல்லா சொத்துக்கு விழா எடுப்போம்
தமிழீழ சுதந்திரமே எங்கள் மூச்சென முழங்கியவர் முன்னால்
தனிச்சொல்லை பெரும் செயலாக மாற்றி தமிழர் சுதந்திர இருப்பை
இவ் அவனியில் உறுதி செய்த எங்கள் பெருந்தலைவனுக்கு
தமிழீழ மக்களின் வாழ்த்துக்கள்
(சி.13298)
தீவகம் கல்வி வலயஊழியர் நலன்புரிக் கழகம்


பார் போற்றும் தமிழீழ தேசத்தின்
தலைவனுக்கு மகுடம் சூட்டுவோம்
அகவை ஐம்பத்தி ஒன்றில் அடியெடுக்கும்
ஈழத்தின் வைரத்து நிலவை வாழ்த்துகின்றோம்
உன் வீரத்தாலும் விவேகத்தாலும் உலகில் உயர்ந்தது தமிழும் தமிழீழமும்
யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு
சமாசங்களின் சம்மேளனம்
இல: 100 பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(சி.13996)


எம்மை ஆளும் எங்கள் தலைவனே உங்கள் அகவை 51
தமிழர் சுதந்திர வரலாற்றின் பொற்காலம்
இக்காலத்தில் வாழ்வதையிட்டு பெருமையடைகிறோம்
நீயே எங்கள் வானம், எங்கள் வாசற்படியில் அண்மிக்கும்
சூரியன் , வெண்நிலவு எங்கள் மூச்சுக்காற்று பேசும் மொழி
உன் காலத்தில் உயர்ந்ததுடன் ஓங்கிபறக்கிறது எங்கள் புலிக்கொடி
உலக வரைபடத்தில் புதிய தேசமாய் எங்கள் தமிழீழம்
உருவாகி விட்டது அதன் பொன் எழுத்துக்களை பொறிக்கும்பணி
ஒன்றே இறுதிப்பணி முடிவாகிவிட்டால்
எம்மையும் அழையுங்கள், தமிழர் நாம் தயாராகிவிட்டோம்
உங்கள் பின்னால் அணிவகுக்க, 51 அகவை கண்டு மகிழ்கின்றோம்
உள்ளம் குளிர வாழ்த்துகின்றோம்.
தென்மராட்சி அதிபர்கள் சமூகம்
தென்மராட்சி ஆசிரியர்கள் சமூகம்
தென்மராட்சி மாணவர் சமூகம்
தென்மராட்சி கல்வி வலயம்
(சி.13996)

## தேசப்புதல்வனுக்கு எங்கள் வாழ்த்துக்கள்!




போர்க் கலைக்கு
புது வடிவம் கொடுத்தவரே!
போர் நடத்தி புதுப்பரணி
படைத்தவரே!
பாரதனில் தமிழினத்தின்
மானம் காத்த
பைந்தமிழின் காவலனே!
நீடூழி வாழ்க!

**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**

நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

(சி-13246)

## நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!



வேங்கைகளின் தலைவா வாழி-நல்
வீரத்தின் விளைநிலமே வாழி...
இருளில் தூங்கிய தமிழர் கண்கள்-உடன்
துலங்கிட வழிசெய்தாய் வாழி!

**மிலேனியம் பெஷன்& பொம்பே பஸார்**

இல:10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-13247)

## நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!




இந்துமா கடலின் முத்தே!
ஈழமகள் கொடுத்த சொத்தே
அண்ணலே வாழி! வாழி!!
ஆண்டுகள் நூறு வாழி!

**கிறீன்பலஸ் எம்போறியம்**

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி-13248)

## தமிழர் தலைவனுக்கு வாழ்த்துக்கள்!



உலகு போற்றும்
உன்னத தலைவா
நிலமும் வானும்
நிலைத்திடும் நாள் வரை
நீடூழி நீ வாழ்க!
எம்நிலம் வாழ நீ வாழ்க!

**வேலும் மயிலும் களஞ்சியம்**

(சி-13249) இல:353, முதன்மைச்சாலை, கிளிநொச்சி.

# 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து





தமிழின வேதனைகள் பல தீர்க்க
சாதனைகளை நிலை நிறுத்தி
உலக சரித்திரத்தை தமிழருக்கு சாதகமாக்கிய
எம் தலைவா நீடுழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

1. ஒட்டுசுட்டான் ப.தெ.வ..அ.கூ.சங்கம்
2. முல்லை மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசம்
3. கனகரத்தினபுர மக்கள்
4. பேராறு மக்கள்
5. கூழாமுறிப்பு மக்கள்
6. ஜீவநகர் மக்கள்
7. மன்னாகண்டல் மக்கள்
8. பண்டாரவன்னியன் வி.கழகம்
9. பரந்தாமன் வி.கழகம்
10. முத்து ஐயன் கட்டு வி.கழகம்
11. சிவநகர் மக்கள்
12. வித்தியாபுர மக்கள்

(13293)

# 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



வல்வைமண் பெற்றெடுத்த
வல்ல தமிழ்த் தலைவா
தொல்லை தரு படை அழிக்க
வில்லெடுத்த பெரும் தலைவா
விண்ணுயர வாழ்ந்திடவே-உன்
மண்ணின் மக்கள்
வாழ்த்துகின்றோம்.



பொன்னம்பலம்,
அரைக்கும் ஆலை,
துணுக்காய்.

0712-704753
0712-709739.

பொன்னம்பலம்,
தொலைத்தொடர்பு நிலையம்,
பிரதானசாலை,,துணுக்காய்,
மல்லாவி.

(13401)

# 51 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



அடக்கு முறைக்கு
அருமருந்தாய்
விடியலின் ஒளிக்கீற்றாய்
வீரத்தின் விருட்சமாய்
வாழ்ந்திருக்கும் எம்
தலைவா
விண்ணுயர
வாழ்ந்திருப்பாய்!

கலைஒளி பந்தல்சேவை,
மின்வாரிய ஒழுங்கை,
மல்லாவி.

(சி.13399)

# 51 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



சுதந்திரத்தின் சுடர் விளக்கே
இடர் தகர்த்த இமையவனே
இந் நாளில் உன்னை
உளமார வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி கல்விவலய,
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வடமராட்சி வலயக்கல்வி
அலுவலகம்.

(சி.13395)

# 51 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



சங்கத்தமிழ் வீரம்
சாற்றிய பெரும் தலைவா
எங்கள் மண்காக்கும்
ஏற்றமிகு எம் தலைவா
பொங்கு தமிழ் காக்க
பூவுலகில் நீ வாழ்வாய்

இல.315,A பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்,
தொ.பே:.222,6637.

(சி.13396)

# 51 ஆவது அகவை காணும் எம் வீரத் தலைவனுக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பொங்கி வரும கடலலையே எம் தலைவா
வீசி வரும் தென்றல் காற்றே எம் தேசியத் தலைவனே
வல்லை மண் பெற்றெடுத்த எங்கள் வீர முத்தே
சத்தியத்திலும் தர்மத்திலும் நேர்மையுள்ளவனே
ஈழதேசம் அந்நியர்களின் பாதமதில் மிதிபட்டு-
தமிழர்களெல்லாம் கொடியவரின் கோரப்பசிக்கு-
நசிபட்ட காலமெல்லாம் போக்கிட தமிழரின் தானைத்-
தலைவனாய் வந்துதித்த எங்கள் கார்த்திகை சூரியனே
51 ஆவது அகவையில் கால்பதிக்கும்
எம் தலைவா வாழ்க!
காலமெல்லாம் எங்கள் ஆணைத் தலைவனாய்
வாழ வேண்டும் என்று எங்கள் நெஞ்சார
நீதுழிகாலம் வாழ்க வாழ்க வென வாழ்த்தி நிற்கும்.

(சி-3400)

போர்க்கருவித் தொழிலகப்
போராளிகள்.



# வாழ்த்துச் செய்தி



வான்புகழ் போற்றிட வல்வெட்டியில் வந்துதித்த தமிழ்தலைவரே
வானம் அளந்தது அனைத்திலும் வன்மொழியாம் நம் தமிழ்மொழியை
வஞ்சனையுடன் பேசுகின்ற தமிழினத்தை அந்நியரிடம் மீட்கவந்த மீட்பரே
வாழ்விடம் நாமமைத்து தமிழ் இனம் காக்க வந்த தன்மானத் தலைவரே
அகவை ஐம்பத்தொன்றில் அடியெடுத்து வைக்கும் நம் அச்சம் போக்கிய
அண்ணன் பிரபாகரனே அந்நியரின் ஆதிக்கத்தை அடக்கியும்
அன்னையர் எம் பெண்ணியத்தின் விடுதலைக்கும் வித்திட்ட பெருமகனே
அன்பது கொண்டு அகமகிழ்ந்து பெருமை கொள்கிறோம் அவதரித்த நாளிலே
பெண்மையை வேட்டையாடிய வேட்டுவரை வேட்டையாடியே
பெண்ணடிமைக்கு வேட்டுவைத்த வேங்கைகளின் தலைவரே
பெண் விடுதலையை சர்வதேசத்திற்குச் சமர்ப்பித்த சாணக்கியரே
பெண்ணுக்கு ஆண் சரிநிகர் என மாற்றி எழுதிய மாமன்னரே
ஆழ்கடலில் தத்தளித்த தமிழினத்திற்கு அரிய தொரு தெப்பமையா
ஆர்ப்பரித்த கடலிடையே அதிலேறி நாமமர்ந்தோம் அடங்கியது கடல்அலை
ஆருமில்லா எம்மினத்திற்கு அடைக்கலம் நான் என்றாய் நாயகரே
ஆள நினைத்தவரை ஆளலாம் விரைவினில் கரைசேரலாம் என்றுரைத்தவரே

பனைக் கோட்டம்,
பெண்கள் மேம்பாடு
பனை.

(சி-3402)


## நடமாடும் சேவை பிற்போடல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சம்பந்தமான நடவடிக்கைகள் இம் மாத இறுதி வரை நடைபெற மாட்டாதென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தி யோகத்தர் செ.சிறிரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி காணி சம்பந்தமான நடமாடும் சேவைகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(சோ)


# துயர் பகிர்கின்றோம்



இராசையா-அரசகேசரி
முதன்மை எழுதுநர்
மாவட்ட காணிப் பதிவகம்
கச்சேரி-கிளிநொச்சி.

தமிழீழ நிர்வாகசேவை ஆற்றல் மேம்பாட்டுக் கல்லூரியில் மாணவர்களுக்கு காணிபற்றி விரிவுரையாற்றி அவர்களின் ஆற்றலை மேம்படுத்தியவர்களில் அரசகேசரி அவர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். அவர் சாவடைந்த செய்தி கேள்வியுற்று அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளதோடு, அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது பணிவான இரங்கலை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்பாளர்,
அதிபர்,மாணவர்கள், பணியாளர்கள்,
ஆற்றல் மேம்பாட்டுக்கல்லூரி,
தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி.13390)



# கண்ணீர் அஞ்சலி

## திரு.பெருமாள்-செல்லையா

முல்லைத்தீவு குரவில் தமிழ்வித்தியாலய அதிபர் திரு.செல்லையா-மோகநாதன் அவர்களின் அன்புத்தந்தை திரு.பெருமாள் -செல்லையா அவர்கள் 18.11.2005 அன்று காலமானார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத்தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள்,
புதுக்குடியிருப்புக்கோட்டம்.

(சி-13285)



# மூன்றாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:-12-12-1976
இறப்பு:-26-11-2002

## கிறிஸ்ரலின் உதயபாணு பரமநாதன்
*(B.A.HONS)*

மூன்றாண்டுகள் சென்றதம்மா
உன் நீங்கா நினைவுகளுடன்
மூன்றாம் பிறைபோல் வளர்ந்து
வந்தாய்
பல்கலையும் கற்றுத் தேர்ந்து
பட்டமும் பெற்றாய்
முழு நிலவாய் மிளிர்வாயென்று
முகமலர்வுடன் காத்திருந்தோம்
நீயோ அநாதைகளாய் எம்மை விட்டு
அமாவாசையாய் எங்கு சென்றாய்.

உன் பிரிவால்துயருறும்,
அம்மா, குடும்பத்தினர்,

இல:-15,
பாலிநகர்,
வவுனிக்குளம்.

(7053)

# ஈரான் அணுவாயுதம் தயாரிக்க அனுமதிக்கக் கூடாது; ஐ.நா கண்காணிப்புக் குழுவில் ஏகமனதாக முடிவு

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க அனுமதிக்கக் கூடாது என்று ஐ.நா கண்காணிப்புக்குழுக் கூட்டத்தில் ஏக மனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் அணு குண்டு தயாரிப்பதற்கான முன்னோட்டமாக யுரேனியத்தை செறிவூட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா ஆகியவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த எதிர்ப்பைத் தொடர்ந்தும் ஈரான் தனது நடவடிக்கையை கைவிடவில்லை. இந்தப் பிரச் சினை ஐ.நா சபைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில் ஐ.நா அணுசக்தி கண்காணிப்புக் குழுக் கூட்டம் வியன்னாவில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் அணுசக்தி உற்பத்தியில் ஈரான் ஈடுபட அனுமதிக்கக்கூடாது என்று ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி ஆகியவை வரைவு அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதை சர்வதேச அணுசக்தி நிறுவனத் தலைவரிடம் தாக்கல் செய்தன.

இப்போதுள்ள சூழ்நிலையில் யூரேனியத்தை செறிவூட்டும் பணியில் ஈடுபட ஈரானை அனுமதிக்கக் கூடாது. பேச்சுவார்த்தை மூலம் அணுசக்தித் திட்டத்தை கைவிடச் செய்ய வேண்டும் என்பது தான் இந்த வரைவு அறிக்கையின் முக்கிய அம்சமாகும்.

இதேவேளை எதிர் வருகின்ற ஆறாம் திகதி ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகள் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடததவுள்ளன.

# அமெரிக்க சனாதிபதியின் வீட்டுக்கு அருகே போர் எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம்:

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி புஷ்சின் வீட்டுக்கு அருகே ஈராக் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பத்துப் பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

டெக்சாஸ் மாநிலத்தில் ஆயிரத்து 600 ஏக்கரில் உள்ள பண்ணை வீட்டுக்கு விடுமுறையைக் கழிப்பதற்காக புஷ் வந்தபோது ஈராக் போருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் இந்த வீட்டுக்கு அருகே சாலையோரத்தில் கூடாரங்கள் அமைத்து அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சனாதிபதி வீட்டுக்கு அருகே போராட்டம் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் போராட்டம் நடத்திய பத்திற்கும் மேற்பட்டோரைப் பொலிசார் கைது செய்தனர்.

# ஈராக்கில் கார்க் குண்டுத்தாக்குதல் இரு குழந்தைகள் உட்பட 35 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய கார் வெடிகுண்டுத் தாக்குதலில் இரண்டு குழந்தைகள், நான்கு பொலிசார் உட்பட 35 பேர் உயிரிழந்தனர். 35பேர் காயமடைந்தனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு தெற்கே 30 கிலோ மீற்றர் தொலைவில் மெஹமதியா என்ற நகரத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மெஹமதியா நகரின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மருத்துவ மனைக் கட்டடம் அருகில் மக்கள் நெரிசல் மிகுந்த இடத்தில் நேற்று முன்தினம் திடீரென கார்க் வெடி குண்டு வெடித்தது.

ஈராக் இராணுவத் தளபதி இப்ராகிம் அப்துல்லா இது பற்றிக் கூறியதாவது; மெஹமதியா நகரில் மருத்துவ மனை அருகே அமெரிக்க இராணுவத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனத்தைக் குறிவைத்தே தீவிர வாதிகள் கார்க்குண்டு வெடிப்பை நிகழ்த்தியுள்ளனர். அமெரிக்க இராணுவ வாகனத்தை நெருங்குவதற்கு முன்னதாகவே காக்குண்டு வெடித்து விட்டது. அமெரிக்க இராணுவ வாகனத்திற்கு இதனால் சேதம் ஏற்படவில்லை. இந்தத் தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் காயமடைந்துள்ளார்களா என்பது பற்றி முழுமையான விபரம் தெரியவில்லை. குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மெஹமதியா நகரில பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

# இஸ்ரேல் பிரதமரின் "காடிமா" கட்சி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் லிகுட் கட்சியில் இருந்து விலகிப் புதிய கட்சி ஒன்றைத் தொடங்கியுள்ளார். அதற்கு'காடிமா' என்று பெயரிட்டுள்ளார். இப்பெயரை அவர் முறைப்படி பதிவு செய்துள்ளார்.

இதையடுத்து லிகுட் கட்சியைச் சேர்ந்த மேலும் 13பேர் பிரதமர் ஷரோனின் காடிமா கட்சியில் சேர்ந்து விட்டனர்.

# சமநிலையில் முடிந்த பைசலாபாத் டெஸ்ட்



விறுவிறுப்பாக நடந்த பைசலாபாத் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. பின்வரிசை வீரர்கள் கைகொடுக்க தோல்வியிலிருந்து தப்பியது இங்கிலாந்து போட்டி சமனானதால் பாகிஸ்தான் 1-0 என்ற முன்னிலையை தக்க வைத்துக்கொண்டது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 462, இங்கிலாந்து 446 ஓட்டங்கள் எடுத்தன. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆடிய பாகிஸ்தான் அணி நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 183 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இங்கிலாந்து ஆறு விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டு இன்னிங்சிலும் சதமடித்த இன்சமாம் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதன் மூலம் இன்சமாம் இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். பைசலாபாத் டெஸ்டின் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்ததன் மூலம் ஒரே டெஸ்டில் இரண்டு சதம் அடித்த பாகிஸ்தானின் ஐந்தாவது வீரராக தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். சதத்தின் மூலம் அதிக சதம் அடித்த பாக். வீரர்கள் பட்டியலில் மியாண்டடை (23சதம்) முந்தி முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

# லாரா இரட்டைச் சதம் மே.தீவு 352 ஓட்டம்



அவுஸ்திரேலியாவின் அடிலைட்டில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலில் ஆடும் மேற்கிந்தியத்தீவுகள் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 352 ஓட்டங்களைப்பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவு முதலில் துடுப்பாடுவதாக அறிவித்தது.

இதன்படி முதலில் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவு குறைந்த ஓட்டங்களுக்கு பிரெட்லீயின் வேகத்துக்கு அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்களை இழந்தபோதும் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரின் அற்புதமான ஆட்டமிழக்காது பெற்ற இரட்டை சத உதவியுடன் மேற்கிந்தியத்தீவு 352 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் லாரா 202, பிறைவோ 34, நாம்டின் 27 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பிரெட்லீ மூன்று, மெக்கில் இரண்டு, மெக்ராத் ,சைமண்ட்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# சாதனை விளிம்பில் லாரா



மேற்கிந்தியத்தீவு நட்சத்திர துடுப்பாட்ட வீரர் பிரைன் லாரா டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்தவர் என்ற சாதனையை நெருங்கியுள்ளார்.

அடிலைட்டில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் இப் பெருமையைப் பெறவுள்ளார்.

இந்தப் பெருமைக்குரியவராக இருக்கும் அவுஸ்திரேலியாவின் அலன் போடரின் 11174 ஓட்டங்களை சமன் செய்ய லாராவுக்கு பதினொரு ஓட்டங்களே தேவையாகவுள்ளது.

# டெஸ்ட் அணியில் இடம்பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது ஆர்.பி.சிங்

டெஸ்ட் அணியில் இடம் கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஆர்.பி.சிங் தெரிவித்துள்ளார். ஒரு நாள்போட்டிகளில் ஆடிவரும் எனக்கு டெஸ்டில் இடம் கிடைத்ததால் எனது கனவு முழுமை அடைந்துள்ளது. இது எனக்கு இரட்டிப்புச் சந்தோசத்தை ஏற்படுத்தியுள்ளது.

அணியில் உள்ள அனைத்து மூத்த வீரர்களும் பயிற்சியாளர் சப்பலும், சிறப்பாக பந்துவீச உதவி வருகின்றனர். இறைவனின் செயலால் அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அடுத்த இரண்டு போட்டிகளிலும் சிறப்பாக ஆட வேண்டும் என அவர் கூறினார்.

## நான்காவது ஒருநாள் போட்டி

# தோற்றது இந்திய பந்து வீச்சு வென்றது சிமித்தின் துடுப்பாட்டம்



தென்னாபிரிக்க - இந்திய அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. நேற்று இரவு - பகலாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பாடிய இந்திய அணியில் யுவராஜ்சிங், கைப், சேவாக் ஆகியோரைத் தவிர ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க இந்திய 45.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

யுவராஜ்சிங் 53, கைப் 46, சேவாக் 30 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அன்ருகோல் நான்கு விக்கெட்டுக்களையும், பொலொக் மூன்று விக்கெட்டுக்களை[illegible], கலிஸ், லாங்வெல்ட் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித்தின் அதிரடி ஆட்டம் அன்ரு கோலின் நின்று நிலைத்த ஆட்டத்தின் உதவியுடன் 35.5 ஓவரில் வெற்றியிலக்கை அடைந்தது.சிமித் அபாரமாக ஆடி 133 ஓட்டங்களைக் குவித்ததுடன் கொல்கத்தா ஈடன் ஹாடன் மைதானத்தில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமையையும் நிலைநாட்டினார். இதுவரை இந்த சாதனைக் குரியவராக இந்தியாவின் முன்னாள் வீரர் சிறிகாந்த் விளங்கினார். அவர் 123 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அன்ருகோல் 47 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்ட நாயகனாக சிமித் தெரிவானார்.

# மூன்றாவது டெஸ்ட் போட்டியில் வென்று தொடரை சமன் செய்வோம் வோன்



தற்போது பாகிஸ்தானில் நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியை வென்று தொடரை சமன் செய்வதாக இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரண்டாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததையடுத்து பாகிஸ்தான் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

வோன் மேலும் கூறியிருப்பதாவது; கடந்த இரு டெஸ்ட் போட்டியிலும், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் தமது அணியை முதலில் துடுப்பாடப் பணித்து பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இருப்பினும் நாம் ஓரளவு ஓட்டங்களைக் குவித்தோம் என்றும் எனினும், முதலாவது போட்டியில் தோல்வியை சந்தித்ததுடன் அடுத்த போட்டியில் வெற்றி பெறமுடியவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் பாகிஸ்தானின் ஓட்டங்களைக்கட்டுப்படுத்த தனது சுழல் பந்து வீச்சாளர்கள் தோற்றுப் போனதாகத் தெரிவித்தார்.

மூன்றாவதும் இறுதியுமான போட்டி வரும் செவ்வாயன்று லாகூரில் ஆரம்பமாகும்.

## சிந்தனைக்கு



பூரண அரசியற்தெளிவும் - விழிப்புணர்வும் ஒரு போராளிக்கு அவசியமானவை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வெளியில் நின்று...

புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் ஜே.வி.பி அங்கம் வகிக்கவில்லை. இதேசமயம் தாம் அமைச்சரவையில் அங்கம் வகிக்காமைக்குத் தாம் சனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ எனும் தனி மனிதனுடனேயே உடன்பாடு செய்து கொண்டதாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் உடன்பாடு எதனையும் செய்யவில்லை எனவும் ஜே.வி.பி விளக்கம் அளித்துள்ளது.

ஜே.வி.பியின் இவ் விளக்கமானது பேச்சிற்கு அர்த்தப்பாடு உடையது போன்று இருப்பினும், தர்க்க ரீதியில் இது எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் தேர்தலில் போட்டிக்கு நிறுத்தப்பட்ட அன்றி நின்ற மகிந்தராஜபக்ஷ தனிநபர் என்பது ஏற்புடையவாதும் அல்ல.

ஏனெனில் அவர் தேர்தலில் போட்டியிடும் போது சிறிலங்காவின் பிரதமர். இப் பதவி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக அவர் இருந்தமையாலேயே கிட்டியதாகும். அத்தோடு சுதந்திரக் கட்சிக்குள் அதன் தலைவரான சந்திரிகா குமாரதுங்கவின் விருப்பத்தையும் மீறி சனாதிபதி வேட்பாளராக நியமனம் பெறும் அரசியல் சக்தி உடையவராக அவர் இருந்தார்.

இவை தவிர மகிந்த ராஜபக்ஷவிற்கு நாட்டில் ஒரு தொகுதி மக்கள் ஆதரவளிக்கத் தயாராக இருந்துள்ளனர் எனின் தனிப்பட்ட நபர் என்ற ரீதியில் அவர் மக்களுக்குச் செய்த சேவையின் நிமித்தம் அல்ல. அவர் நீண்ட காலமாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் சேவைகள் என்பனவற்றின் காரணமாகவும் ஆகும்.

இவை ஒரு புறம் இருக்க மகிந்த ராஜபக்ஷவுடன் தனிப்பட்ட ரீதியில் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வதானால் ஏன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் சின்னத்தில் போட்டியிட வேண்டும்? பொ.ஐ முன்னணியின் சின்னத்தில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டிருக்க வேண்டும். அன்றி ஜே.வி.பியின் சின்னத்தில் போட்டியிருக்கலாமே. ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உடன்பாடு காரணமாக உருவான ஐ.ம.சு முன்னணிச் சின்னத்திலேயே போட்டியிட்டார். அது ஏன்?

அவ்வாறு இல்லாது ஐ.ம.சு முன்னணியின் தேர்தல் சின்னத்தில் மகிந்தராஜபக்ஷவைப் போட்டியிட வைத்துவிட்டு நாங்கள் மகிந்த ராஜபக்ஷவுடன் தனிப்பட்ட ரீதியில் உடன்பாடு செய்து கொண்டோமேயொழிய சுதந்திரக் கட்சியுடன் செய்து கொள்ளவில்லை எனக் கூறுவது ஏமாற்றுத்தனமானது. ஜே.வி.பி உடன்பாடு செய்து கொண்ட காலப்பகுதியில் இருந்தே இதனைக் கூறி வந்ததாயினும் இது உண்மையில் மகிந்த ராஜபக்ஷவை அழுத்தத்திற்கு உள்ளாக்கும் - அவர் மீது செல்வாக்குச் செலுத்தும் நடவடிக்கையாகும்.

மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகிப்பதில்லை என்ற ஜே.வி.பியின் முடிவானது அடிப்படையில் புதிய சனாதிபதி மீது தொடர்ச்சியான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கும், தமது நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு வற்புறுத்தவும் மேற் கொள்ளும் நடவடிக்கையே ஆகும். அதாவது ஆட்சியில் பொறுப்பேற்காத அரசாங்கத்தைத் தம்மில் என்றும் தங்கியிருக்கச் செய்யும் நடவடிக்கையே.

புதிய அமைச்சரவையில் அங்கம் வகிப்பதில்லை எனத் ...ரிவிக்கும் ஜே.வி.பி, அமைச்சரவை பதவி ஏற்ற மறுநாள் நடத்திய ...கவியலாளர் மாநாட்டில் தேர்தலின் முன்னர் மகிந்த ...க்ஷவுடன் செய்து கொண்ட உடன்பாட்டு விதிகள் சிலவற்றை ...ப்படுத்தியுள்ளது. குறிப்பாக நோர்வேயின் சமாதான ...கள் புறக்கணிக்கப்படுதல் வேண்டும், யுத்த நிறுத்த உடன்பாடு ...சீரமைக்க செய்யப்பட வேண்டும், பொதுக் கட்டமைப்பு ...ட வேண்டும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ... பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்பனவையே ...ந்தப்பட்டவையாகும்.

... மகிந்த ராஜபக்ஷ தமது முன்னைய உடன்பாட்டு ...மாறாகச் செயற்படாது பார்த்துக் கொள்ளுதல் ...வி.பி கவனமாகவே உள்ளது. இதன் காரணமாகவே ...யில் அங்கம் வகிக்க அது மறுத்துள்ளது.

... ஜே.வி.பியின் நோக்கில் தமக்கு இசைவானதொரு ...ய மகிந்த ராஜபக்ஷ உருவாக்க வேண்டும். இதே ...த் தேர்தலில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டை ... வகையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட ...கயதொரு நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ ...றுத்தல் இன்றி ஆட்சியை நடத்த முடியும். அவ் ...யும் அமைச்சரவையில் அங்கம் வகிக்க முன்

...பியின் நிபந்தனைகள், எதிர்பார்க்கைகள் ...ந்த ராஜபக்ஷ நிறைவேற்றுவாரேயானால் ...ாடி ஆபத்து இல்லாது போகலாம். ஆனால் ...யின் நிபந்தனைகளை சனாதிபதி மகிந்த ...் போது நாடு பெரும் ஆபத்தை எதிர் ...நும் நெருக்கடிக்குள் உள்ளாவதோடு நாடும் ...முடியாதாகிப் போய் விடும்.

# உள் விவகாரங்களில் தேவையின்றித் தலையிடும் நோர்வேயை அனுசரணையாளராக அழைக்கக்கூடாது

## ஜே.வி.பி அரசிடம் வலியுறுத்து

இலங்கை இனப்பிரச்சினையின் அனுசரணையாளராக நோர்வே நாட்டை பங்கேற்க அழைப்பு விடுக்கக் கூடாது என்று ஜே.வி.பி எச்சரித் துள்ளது.

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க நேற்று முன்தினம் கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசியதாவது;

சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரங்களில் நோர்வே தேவையின்றித் தலையிடுகின்றது. நோர்வே தேவையா இல்லையா என்பதை மகிந்த ராஜபக்ஷ தான் முடிவு செய்வார். அனுரணையாளராக நோர்வேயை மகிந்த ராஜபக்ஷ அழைக்கக் கூடாது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் விடுதலைப் புலிகளின் செயற்பாடு களுக்கு உரிமை அளிக்கக் கூடிய பாரபட்சமான ஒப்பந்தமாக அது இருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான ஒப்பந்தத்தில் ஒற்றையாட்சிமுறை முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளதை வரவேற்கிறோம். வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கும் உரிமையை விடுதலைப்புலிகள் தடுத்தமைக்கு எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம். இது தொடர்பிலான ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினது அறிக்கையின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாங்கள் தொடர்ந்தும் எதிர்க்கட்சியில் இருந்து செயற்படத் தீர்மானித்துள்ளோம். மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் குறித்துத் நாங்கள் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகிறோம்.

மகிந்த ராஜபக்ஷவை இந்தத் தேர்தலில் வெற்றி பெறச் செய்வதற்காக எடுக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்தோம். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஜே.வி.பி ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றும் என்றார் சோமவன்ச அமரசிங்க.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, மீண்டும் கூட்டணி அரசாங்கத்துடன் இணைவதாயின் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். மகிந்த ராஜபக்ஷ என்ற தனி நபருடனேயே உடன்படிக்கையை செய்து கொண்டோம். அரசாங்கத்துடன் எவ்வித உடன்படிக்கையையும் செய்து கொள்ளவில்லை. எங்களின் கடமையை நிறை வேற்றியுள்ளோம். இனி சனாதிபதி தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். அவரைத் தேர்தலில் வெற்றியடையச் செய்வது குறித்து மட்டுமே பேச்சுவார்த்தைகளை நாம் மேற்கொண்டோம். அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்பது குறித்து தாங்கள் எவ்வித பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளவில்லை என்றார் ரில்வின் சில்வா

# சந்திரிகா - ரணில் திடீர் சந்திப்பு; தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்வு

சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க திடீரென நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

சனாதிபதி இல்லத்தில் தற்போதும் இருக்கும் சந்திரிகாவுடனான ரணிலின் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் நீண்ட நேரம் நடைபெற்றுள்ளது.

சிறிலங்காவின் அரசியல் நிலைமைகள், அமைதி முயற்சிகள், தேசியப் பட்டியலின் மூலம் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் சந்திரிகா நுழைவது உள்ளிட்ட விடயங்களை இருவரும் விவாதித்ததாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே சந்திரிகா குமாரதுங்கவை வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மங்கள சமரவீரவும் சந்தித்துள்ளார். இச் சந்திப்பின் போதும் தாம் பாராளுமன்றத்திற்கு மீண்டும் திரும்பவுள்ளது குறித்து மங்கள சமரவீரவிடம் சந்திரிகா கூறியதாகவும், தெரிகிறது.

தாம் பிரதமராவோம் என்று எண்ணியிருந்த நிலையில் தாம் அப்பதவியில் நியமிக்கப்படாமை குறித்து சந்திரிகாவிடம் கவலை தெரிவித்ததாகவும், தம்மை ஓரங்கட்டுவதில் மகிந்தவின் சகாவான டலஸ் அழகப்பெரும தலையிடுவதாகவும், சந்திரிகாவிடம் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தை யார் கைப்பற்றுவது என்ற போட்டி மங்கள சமரவீரவுக்கும் அழகப் பெருமவுக்கும் நீண்ட காலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் தேசியப் பட்டியலினூடாக அழகப் பெருமவை பாராளுமன்ற உறுப்பினராக்க மகிந்த ராஜபக்ஷ முயற்சித்து வருகிறார். இந்த நிலையில் மங்கள சமரவீரவின் சந்திரிகாவுடனான சந்திப்பு சுதந்திரக் கட்சியின் உள் முரண்களை விரைவில் வெளிப்படுத்தக் கூடும் என்று கருதுவதாக கொழும்பு ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான கரு ஜயசூரியவுடனும், ரணில் நேற்று முன்தினம் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார். அக் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து ரணில் நீக்கப்பட்டு கருஜயசூரிய தலைவராகக்கப்படக்கூடும் என்ற நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவமானதாக இருக்கக்கூடும் என்று ஐ.தே.கவினர் கருதுகின்றனர்.

# சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் நேர்மையாக, சுதந்திரமாக நடைபெறவில்லை

## ஊடகவியலாளர் மாநாட்டில் ரணில்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் நேர்மையான, சுதந்திரமான தேர்தல் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க பேசியதாவது,தெற்கில் வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் அச்சுறுத்தல் காரணமாக வாக்களிக்கவில்லை எனவே சுதந்திரமான தேர்தல் நடைபெற்றதாகக் கூற முடியாது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய தேர்தல் கண்காணிப்பாளர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கைகளுக்கமைய இது உறுதியாகிறது.

தான் முன் வைத்த மக்கள் நிகழ்ச்சி நிரல் சரியா தவறா என்பதை எதிர்காலம் தான் தீர்மானிக்க வேண்டும். பல பிரதேசங்களில் மக்களுக்கு வாக்களிக்க முடியாததொரு நிலை ஏற்பட்டமையினால் தான் முன் வைத்த நிகழ்ச்சி நிரல் சரியா தவறா என்பதை அறிந்து கொள்ள முடியாமல் போனது. நாட்டினது எதிர்காலம் தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியதாவது;

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் எவ்வித மாற்றமுமில்லை.

எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பல யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் தலைவரை மாற்றவேண்டுமென எவ்வித யோசனைகளும் முன் வைக்கப்படவில்லை. அப்படியான முடிவு எடுக்கப்பட வேண்டுமாயின் அதற்கு கட்சியின் செயற்குழு, பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, நிறைவேற்றுக் குழு கட்சிப் பேராளர் மகாநாடு தான் அதனைச் செய்ய வேண்டும்.

எதிர்வரும் திங்கட்கிழமை கட்சியின் செயற்குழு கூடி எதிர்காலத்தில் வரவிருக்கும் தேர்தல்களுக்கு எவ்விதம் முகம் கொடுப்பது என்பது குறித்து ஆராய உள்ளோம்.

வாக்காளர்கள் தங்கள் கட்சியின் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பொய்யாக்க மாட்டோம். கட்சியில் தேவையான மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.


51
பிறந்ததின நல் வாழ்த்துக்கள் !
பைந்தமிழின் துயர் துடைக்க எழுந்தான்
பாலகனாய் வல்வையிலே பிறந்தான்
வெஞ்சமரில் வென்று புலி நிமிர்ந்தான்
வேங்கையவன் புது அகவை கண்டான் !
யமஹா பிளாஸா
298, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
(சி-13229)


தேசியத்தின் புதல்வனுக்கு எங்கள் வாழ்த்துக்கள்!
உண்மையும் அறமும்
உயிர் என்று வாழும்
உள்ளம் எம் தலைவனுள்ளம்
உரிமைப்போர் வெல்லும்
வரை எங்கள் மண்ணில்
ஓயாத நெருப்பு வெள்ளம்!
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5971
(சி-13230)


வரலாறு, வல்லமை, வழிகாட்டி
அகவை
51
நிறைவில்
வீரம் விளைக்கும் வயலே
விடுதலைப் பயிரின் மழையே
கருணை பொழியும் கடலே
தமிழர் தேசப் பலமே
துன்பம் தாங்கும் துணையே
இன்பம் தந்த உறவே
ஈழம் செய்யும் உளி
சொந்தம் என்று உ
ஆயிரம் கோடி ஆண்டுகள்
ஆண்டிட வேண்டி வாழ்த்து
வாழ்க! வாழ்க
Tilko Holidays(pvt)Ltd
Jaffna City Hotel
70/8,70/6, k.k.s Road, Jaffna.
T.P:-021-222 5969,7291
TILKO Holidays
(சி-13231)